# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2045/56 - 2017 නොවැම්බර් මස 17 වැනි සිකුරාදා - 2017.11.17

*2045/56 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி 10/2017*

**2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

*2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

ரணில் விக்கிரமசிங்க,
தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2017, நவெம்பர் 17.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2017 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணி (அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளினால் கொண்டு நடாத்தப்படும் வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புகள்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் எத்தேதியன்று அச்சட்டம் நடைமுறைக்கு வருகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

**பாகம் I**

**மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் வகுப்புகள்**

2. (1) பின்வரும் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளினால் கொண்டு நடாத்தப்படும் வெளிநாட்டுச் செலாவணியிலான மூலதனக் கொடுக்கல்வாங்கல்களின் அதிகாரமளிக்கப்பட்ட வகுப்புகள் ஆதல் வேண்டும்:-

(அ) இவ்வொழுங்குவிதிகளிற்கான I ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய வரையறைகள் நியதிகள் மற்றும் நிபந்தனைகளிற்கு அமைய இலங்கையில் வதிவற்ற ஆள் ஒருவரினால் இலங்கைக்கு வெளியே பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள்;

(ஆ) இவ்வொழுங்குவிதிகளிற்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய வரையறைகள், நியதிகள் மற்றும் நிபந்தனைகளிற்கு அமைய இலங்கைக்கு வெளியே வதிவற்ற ஆளொருவரினால் இலங்கையில் பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள்; அத்துடன்

(இ) இவ்வொழுங்கு விதிகளிற்கான III ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய வரையறைகள், நியதிகள் மற்றும் நிபந்தனைகளிற்கு அமைய நீக்கப்பட்ட கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்ட (பொது அல்லது விசேட) ஏதேனும் அங்கீகாரத்தின்கீழ் பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள்.

(2) இவ்வொழுங்குவிதிக்கான IX ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட வேறு மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள், அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளினாலும் அத்துடன் இச்சட்டத்தின் 4(1)(ஈ) என்னும் பிரிவின்கீழ் வெளிநாட்டுச் செலாவணியை கையாளுவதற்கு அதிகாரமளிக்கப்பட்டிருந்துள்ளவராக கருதப்பட்டவராலும் அத்துடன் IV ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதான அத்தகைய வரையறைகள், நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளாக இச்சட்டத்தின் 4(1)(இ) என்னும் பிரிவினை வெளிநாட்டுச் செலாவணியை கையாளுவதற்கு மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்படக் கூடியதான உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகளினாலும் கொண்டு நடாத்தப்படுதல் வேண்டும்.

3. (1) இலங்கைக்கு வெளியே வங்கி ஒன்றினுள் கணக்கொன்றை திறப்பதற்கு, பேணுவதற்கு மற்றும் தொழிற்படுத்துவதற்கும் அத்துடன் அத்தகைய கணக்குகளை மூடுவதற்கு உட்கருதுகின்றவாறான IV ஆம் அட்டவணையின் தலைப்பு ஏ இன்கீழ் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக அவ்வாறு செய்யலாம்.

(2) ஓராம் பந்தியின்கீழ் திறக்கப்படும் கணக்கொன்று இலங்கைக்கு வெளியே சட்டரீதியாக பெறப்பட்ட அல்லது கொள்ளப்பட்ட அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி ஒருவரிடமிருந்து அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட கணக்கு வைத்திருப்பவரின் வெளிநாட்டு நாணய கொடுக்கல்வாங்கல் ஒன்றுக்கு IV ஆம் அட்டவணையின் தலைப்பு ஏ யின் பந்தி I இல் குறித்துரைக்கப்பட்ட இலங்கையிலுள்ள ஆள் ஒருவரிடமிருந்து பெறப்பட்டதுமான வெளிநாட்டுச் செலாவணியுடன் வரவுவைக்கப்படலாம்.

(3) ஓராம் பந்தியின்கீழ் திறக்கப்படும் நிதிக்கணக்குகள் இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் இலங்கையில் வதிவுள்ள ஆள் ஒருவருக்கு அனுமதிக்கப்பட்ட கணக்கு வைத்திருப்பவரின் ஏதேனும் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களிற்கு பயன்படுத்தப்படலாம்.

(4) ஐந்தாம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய, (1) ஆம் பந்தியின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிக்கிணங்க வெளிநாட்டு வங்கி ஒன்றில் திறக்கப்பட்டு பேணப்படும் கணக்கொன்று மூடப்படுகின்றவிடத்து, கணக்கின் மீதியானது அத்தகைய கணக்கு மூடுகைபற்றி ஒருமாதகாலத்தினுள் வங்கித்தொழில் வழிகளினூடாக இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படல் வேண்டும்.

(5) மேலே IV ஆம் அட்டவணையின் ஏ என்னும் தலைப்பின் (எ) என்னும் விடயத்தின்கீழ் இலங்கைக்கு வெளியே கணக்கொன்றைத் திறந்து பேணுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்ற ஆள் ஒருவர் அத்தகைய நாட்டினால் மாணவர் விசா மறுக்கப்படுகின்றவிடத்து அல்லது மாணவர் விசாவைப் பெற்ற பின்னர் கற்கைகளை தொடங்கவில்லை என தீர்மானிக்கின்றவிடத்து, அத்தகைய ஆள் அத்தகைய முடிவுத் திகதியிலிருந்து ஒரு மாத காலத்தினுள் இவ் அனுமதியின்கீழ் இலங்கைக்கு வெளியே அத்தகைய ஆளினால் திறக்கப்பட்ட கணக்கின் வரவிற்கு இடுகின்ற எல்லாப் பணங்களையும் திருப்பி அனுப்புதல் வேண்டும்.

## பாகம் II

### பொது நிபந்தனைகள் முதலியன

4. (1) அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி ஒருவராக உரிமமளிக்கப்பட்ட ஒவ்வொரு வர்த்தக வங்கி, அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி ஒருவராக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினூடாக மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் ஆள், பிணையங்களின் வழங்குநர்கள் மற்றும் கடன்பெறுநர்கள், அவர்கள் ஈடுபட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் இவ்வொழுங்குவிதிகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் என்பதற்கு எண்பிப்பாக அத்தகைய ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலிலிருந்தும் ஆறாண்டு காலப்பகுதியொன்றிற்கு எல்லாத் தகவல்களையும் ஆவணச் சான்றையும் வைத்திருத்தல் வேண்டும்.

(2) பிணையங்களில் முதலீடுகள், கடன்கள் பெறுதல் மற்றும் பொறுப்புக்களுக்கு உத்தரவாதமளித்தல் விடயத்தில், அத்தகைய தகவல், அத்தகைய பிணையங்களின் கையுதிர்ப்பு, கடன் மீள்கொடுப்பனவு அல்லது உத்தரவாதத்தின் காலாவதித் தேதியிலிருந்து ஆறாண்டு காலப்பகுதியொன்றிற்கு வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

(3) அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி ஒருவராக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினூடாக இவ்வொழுங்கு விதிகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல் ஒன்றில் ஈடுபட்ட எவரேனும் ஆள், நிதியங்களின்

உட்பாய்ச்சல்கள் அல்லது வெளிப்பாய்ச்சல்கள், சொத்துக்களின் கையுதிர்ப்பு அல்லது கொள்ளுதல், மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய வருமானம் அல்லது விபரத்திரட்டுக்களின் பற்றுச்சீட்டுக்கள் பற்றிய முறையான சட்டரீதியாக ஏற்றுக்கொள்ளப்படற்பாலதான ஆவணச் சான்றையும் அத்தகைய கொடுக்கல்வாங்கல்களின் சட்டத்தன்மையை பொருளளவில் எண்பிக்கும் வேறு ஏதேனும் ஆவணச்சான்றையும் வைத்திருத்தலும் பேணுதலும் வேண்டும்.

(4) அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி ஒருவராக உரிமமளிக்கப்பட்ட ஒவ்வொரு வர்த்தக வங்கியும் மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி ஒருவராக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினூடாக மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் ஒவ்வொரு ஆளும் இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுக அத்தகைய கொடுக்கல்வாங்கல்களின் போது அவசியமான ஆவணங்களை வழங்குவதன் மூலம் வசதியளித்தல் வேண்டும்.

## அட்டவணை I

(ஒழுங்குவிதி 2(அ))

இலங்கையில் வதிவுள்ள ஆட்களினால் இலங்கைக்கு வெளியே பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள்.

1. எவரேனும் தகவுடைய வதிவிட முதலீட்டாளர் பின்வரும் நோக்கங்களுக்காக மூலதன கொடுக்கல்வாங்கல்களுக்காக இலங்கைக்கு வெளியேயுள்ள வதிவிட ஆட்களுக்கு கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி ஒருவராகவுள்ள ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியைக் கொள்வனவு செய்யலாம்:-

(அ) (கடல் கடந்த கம்பெனி ஒன்று) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பெனிகளின் பங்குகள் மற்றும் தனிசுப் பிணையங்கள், ஒழுங்குபடுத்தப்பட்ட கூறு நம்பிக்கைப் பொறுப்புகளில் உள்ள கூறுகள் மற்றும் பரஸ்பர நிதியங்கள் அத்துடன் முதலீட்டின் போது இலங்கையின் இறைமையுள்ள கடன் மதிப்பீட்டில் அல்லது அதற்கு மேல் மதிப்பிடப்பட்ட, வெளிநாட்டு அரசாங்கங்களினால் வழங்கப்பட்ட இறைமையுள்ள முறிகளையும் கொள்ளுதல் மற்றும் வைத்திருத்தல்,

(ஆ) (தனியாளினால் தவிர) வெளிநாடொன்றில் ஒரு கிளை, இணைப்பு, சந்தைப்படுத்தல், முகவராண்மை, கருத்திட்ட, பிரதிநிதித்துவ அல்லது வேறு ஒத்த அலுவலகத்தைத் (கடல் கடந்த அலுவலகம்) தாபித்தல் மற்றும் பேணுதல்.

2. (1) மேலே பந்தி 1 இல் குறித்துரைக்கப்பட்ட மூலதன கொடுக்கல்வாங்கல்கள், கீழேயுள்ள அட்டவணை 1 இல் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளும் அத்துடன் இவ்வட்டவணையின் ஏற்பாடுகளுக்கும் அமைந்ததாதல் வேண்டும்.

### அட்டவணை - 1

### வெளித்திரும்பல் முதலீடுகளுக்கான வரையறைகள்

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| தகவுடைய வதிவிட முதலீட்டாளர் | முதலீடுகளின்/சாதனங்களின் வகை | அனுமதிக்கப்பட்ட வரையறை |
| (i) கொழும்பு பங்குத்தொகுதி பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்பட்ட கம்பெனி ஒன்று | பங்குகள், கூறுகள், தனிசுப் பிணையங்கள் மற்றும் இறைமையுள்ள முறிகள் | ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிற்கும் 2,000,000 ஐ அ டொ அல்லது மத்திய வங்கியினால் பெயர் குறிக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை. |
| (ii) கொழும்பு பங்குத்தொகுதி பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்படாத கம்பெனி ஒன்று | | ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிற்கும் 5,000,000 ஐஅடொ அல்லது மத்திய வங்கியினால் பெயர் குறிக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை. |
| (iii) இலங்கையில் பதிவு செய்யப்பட்ட பங்காண்மை ஒன்று | | வாழ்க்கைக் காலத்துக்காக 300,000 ஐஅடொ அல்லது மத்திய வங்கியினால் பெயர் குறிக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை. |

**அட்டவணை - 1** *(தொடர்ச்சி)*

**வெளித்திரும்பல் முதலீடுகளுக்கான வரையறைகள்**

| நிரல் I<br>தகவுடைய வதிவிட முதலீட்டாளர் | நிரல் II<br>முதலீடுகளின்/சாதனங்களின் வகை | நிரல் III<br>அனுமதிக்கப்பட்ட வரையறை |
|---|---|---|
| (iv) தனியாள் ஒருவர் | | வாழ்க்கைக் காலத்துக்காக 200,000 ஐஅடொ அல்லது மத்திய வங்கியினால் பெயர் குறிக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை. |
| (v) கம்பெனி ஒன்று அல்லது பங்காண்மை ஒன்று | கடல் கடந்த அலுவகங்களைத் தாபித்தல் | ஒவ்வொரு பஞ்சாங்க ஆண்டிற்கும் 300,000 ஐஅடொ அல்லது மத்திய வங்கியினால் பெயர் குறிக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகை. |

(2) மேலே அட்டவணை 1 இல் குறித்துரைக்கப்பட்ட முதலீடுகளுக்கான கூட்டுமொத்த வரையறைகள், இவ்வொழுங்குவிதி களின்கீழ் ஆக்கப்பட்ட கூட்டுமொத்த முதலீடுகளையும், நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் நியதிகளின்படி வழங்கப்பட்ட, 2011 ஆம் ஆண்டின் சனவரி 1 ஆந்திகதிய வர்த்தமானி அறிவித்தல் இலக்கங்கள், 1686/50, 1686/52 மற்றும் 1686/53 போன்றவற்றின் மூலம் வழங்கப்பட்ட பொது அனுமதியின் நியதிகளின்படி முன்னதாகச் செலுத்தப்பட்ட ஏதேனும் வெளித்திரும்பல் கொடுப்பனவையும் கொண்டிருத்தல் வேண்டும்.

3. மேலே வரையறைகளை விஞ்சுகின்ற எவையேனும் முதலீடுகள் மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத்தின் தலைவருக்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்மீது இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின் நியதிகளின்படி பணச்சபையின் விசேட அங்கீகாரம் ஒன்றை தேவைப்படுத்த வேண்டும்.

4. அனுமதிக்கப்பட்ட முதலீடுகளை ஆக்குவதற்கு தேவைப்படும் வெளித்திரும்பல் அனுப்புதொகைகள் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றுடன் தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளர்களால் திறக்கப்படும் மற்றும் பேணப்படும் வெளித்திரும்பும் முதலீட்டுக் கணக்கு ஒன்றின் ஊடாக செய்யப்படுதல் வேண்டும்.

5. (வழங்குகையினாலான கூட்டு நடவடிக்கை ஒன்றின் பயனைக்கொண்டு அத்தகைய முதலீட்டாளர்மீது வந்துறுகின்ற எவையேனும் அடுத்துப்பின்னரான பங்குகள், உரிமைப் பிரயோகம், உரித்துடைமை அல்லது மாற்றம் உட்பட) அத்தகைய முதலீடுகளிலிருந்தான ஏதேனும் வருமானம் மற்றும் கையுதிர்த்தல் வரும்படிகள் ஆனவை ஆரம்ப முதலீடு எந்த வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கின் ஊடாக கொடுப்பனவுத் திகதியிலிருந்து மூன்று மாதங்களினுள் செய்யப்பட்டிருந்ததோ அதே வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கினூடாக இலங்கைக்குள் கொண்டுவரப்படுதல் வேண்டும்.

6. தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளர் ஒவ்வொருவரும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி ஒருவராக ஒரு உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியுடன் எல்லா வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளைப் பேணுதல் வேண்டும் என்பதுடன் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி ஒருவராக ஒன்றுக்கு மேற்பட்ட உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றுடன் வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளை திறப்பதற்கும் பேணுவதற்கும் தேவைப்படுகின்றவரான அத்தகைய எவரேனும் முதலீட்டாளர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி ஒருவராக அந்தந்த உரிமம் பெற்ற வர்த்தக வங்கி ஒன்றினூடாக வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களத் தலைவரிடமிருந்து விசேட அங்கீகாரம் ஒன்றைப் பெறுதல் வேண்டும்.

7. நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் இலங்கையில் வதிவுள்ள எந்த ஆளுக்கு எதிராக குற்றவழக்கு அல்லது புலனாய்வுகள் தொடர்பிலான சட்டவழக்கு நடவடிக்கைகள் முடிவுறாதிருக்கின்றதோ அந்த ஆள் இவ்வட்டவணையின்கீழ் அனுமதிக்கப்பட்ட நோக்கங்களுக்காக மூலதனக் கொடுக்கல்வாங்கல்களை நிறைவேற்றுவதற்கு தகவுடையவராதல் ஆகாது.

8. எவரேனும் தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளர்கள், பிரதிபலன் எதுவும் அனுமதிக்கப்பட்ட முதலீட்டாளர்கள் தொடர்பில் செலுத்தப்பட்டிருக்காதவிடத்து இவ்வட்டவணையின் 2 ஆம் பந்தியின் 1 ஆம் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட மட்டுப்பாடுகள் இன்றியும் வரையறைகளைப் பொருட்படுத்தாமலும் கடல்கடந்த கம்பெனி ஒன்றின் பங்குகளை கொள்ளலாம் மற்றும் வைத்திருக்கலாம்.

*9.* இவ்வட்டவணையின் *2* ஆம் பந்தியில் *1* ஆம் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட வரையறைகள் ஆனவை இலங்கையிலுள்ள கடல்கடந்த கம்பெனியின் கிளைகளை அல்லது அதன் துணைநிலைக் கம்பெனிகளைச் சேர்ந்த ஊழியர்களுக்கு கடல்கடந்த கம்பெனி ஒன்றினால் முனையப்பட்ட ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டம் அல்லது ஊழியர் பங்கு விருப்பத்தெரிவு செய்திட்டத்தின்கீழ் அத்தனியாளுக்கு உரித்தாக்கப்பட்ட பங்குகளுக்காக கொடுப்பனவு செய்வதற்கு தேவைப்படுத்துகின்றவரான தனியாளுக்கு ஏற்புடையதாதல் ஆகாது. இலங்கையில் தாபிக்கப்பட்ட துணைநிலைக் கம்பெனிகளிடமிருந்து அல்லது கிளைகளிலிருந்து பெரியளவிலான அனுப்புதொகை ஒன்றின் அடிப்படைமீது அத்தகைய கடல்கடந்த கம்பெனிக்கு மேலே குறிப்பிடப்பட்ட பங்குகளின் பெறுகைக்கான பிரதிபயன் என்ற வகையாக வெளித்திரும்பல் அனுப்புதொகை ஒன்றைச் செய்வதற்கு ஏதேனும் தேவைப்பாடு இருப்பின், அத்தகைய நிதிக் கைமாற்றல்கள் சட்டத்தினால் தேவைப்படுத்துகின்றவாறு கொடுக்கல்வாங்கலை நல்லெண்ணத்துடன் திருப்திப்படுவதன்மேல் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒன்றினால் செய்யப்படலாம்.

*10.* தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளர் ஒருவர் இவ்வட்டவணையின் *2* ஆம் பந்தியின் *1* ஆம் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட அனுமதிக்கப்பட்ட வரையறைகளுக்கு அமைய இராமல் வெளித்திரும்பல் முதலீட்டு கணக்கிற்கு வரவுவைக்கப்பட்ட முன்னைய வெளித்திரும்பல் முதலீடுகளின் மூலதனப் பெறுகைகளின் பெறுமதியின் ஐம்பது சதவீதம்வரையான நிதிகளைப் பயன்படுத்தி மேலே இவ்வட்டவணையின்கீழ் அனுமதிக்கப்பட்ட நோக்கங்களுக்காக முதலீடுகளை செய்வதற்கு அனுமதிக்கப்படலாம்.

*11.* இவ்வட்டவணையின் நோக்கத்திற்காக -

"மத்திய வங்கியானது" *2017* ஆம் ஆண்டின் *12* ஆம் இலக்க, வெளிநாட்டு செலாவணிச் சட்டத்திலுள்ளவாறு அதேகருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"கொழும்பு பங்குத்தொகுதி பரிவர்த்தனை" என்பது *2007* ஆம் ஆண்டின் *7* ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டு பதிவுசெய்யப்பட்டதும் அத்துடன் பங்குத்தொகுதி பரிவர்த்தனை ஒன்றாக தொழிற்படுவதற்கு *1987* ஆம் ஆண்டின் *36* ஆம் இலக்க இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின்கீழ் இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் உரிமமளிக்கப்பட்டதுமான கொழும்பு பங்குத்தொகுதி பரிவர்த்தனை எனப் பொருள்படும்.

"தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளர்" என்பது மேலே *2* ஆம் பந்தியின் *1* ஆம் பட்டியலின் *1* ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டவாறு தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளர் எனப் பொருள்படும்.

"ஊழியர் பங்குச் சொத்தாண்மைத் திட்டம் அல்லது ஊழியர் பங்கு விருப்பத்தெரிவு செய் திட்டம்" என்பது இலங்கையில் அதனது கிளையினை அல்லது துணை நிலைக் கம்பெனியினை சேர்ந்த ஊழியருக்கு இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பெனி ஒன்று எந்த திட்டம் அல்லது செயற்திட்டத்தின்கீழ் அதனது பங்குகளை அல்லது கம்பெனிகளின் குழுவின் பங்குகளை கொள்ளுவதற்கு சந்தர்ப்பம் ஒன்றை வழங்குகின்றதோ அந்த திட்டம் அல்லது செயற்திட்டம் எனப் பொருள்படும்.

"பணச்சபை" ஆனது *2017* ஆம் ஆண்டின் *12* ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறு அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## அட்டவணை II

(ஒழுங்குவிதி *2* (ஆ))

இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆள் ஒருவரினால் இலங்கையில் பொறுப்பேற்கப்படும் மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள்.

அ. அனுமதிக்கப்பட்ட முதலீடுகள் :

*1.* இலங்கைக்கு வெளியே தாபிக்கப்பட்ட நாட்டு நிதியங்கள், பிராந்திய நிதியங்கள், முதலீட்டு நிதியங்கள் மற்றும் பரஸ்பர நிதியங்கள் உள்ளடங்கலாக இலங்கைக்கு வெளியே வதிகின்ற எவரேனும் ஆள் இலங்கையின் மூலதனக் கொடுக்கல் வாங்கல்களில் பின்வரும் வகைகளில் ஈடுபடலாம். இது இலங்கையினுள் வெளிநாட்டு செலாவணியின் அனுப்புதொகையை தேவைப்படுத்துகின்றது.

(அ) இவ்வட்டவணையின் A என்னும் தலைப்பின்கீழ் பந்தி *3* இல் குறித்துரைக்கப்பட்ட தவிர்ப்புக்களுக்கு அமையவும் பந்தி *4* இல் குறித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு அமையவும் *2007* ஆம் ஆண்டின் *7* ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனிகளினால் வழங்கப்பட்ட (வழங்குநரினால் கூட்டுநடவடிக்கையின் பயனைக்கொண்டு அத்தகைய முதலீட்டாளர் மீது வந்துறுகின்ற எவையேனும்

அடுத்துப்பின்னரான பங்குகள், உரிமை ஒன்றின் பிரயோகம், உரித்துடைமை அல்லது மாற்றம் உட்பட) எல்லா வகுப்பினதான பங்குகள் அல்லது பங்குகளிற்கான உரித்துடைமை என்பவற்றை முதலிடுதல் கொள்ளுதல் வைத்திருத்தல்;

(ஆ) இலங்கையில் கூட்டிணைக்கப்படாததும் கொழும்பு பங்குத்தொகுதி பரிவர்த்தனையில் நிரற்படுத்தப்பட்டதுமான கம்பெனி ஒன்றில் எல்லா வகுப்பினதான பங்குகளை கொள்ளுதல் அல்லது வைத்திருத்தல்.

(இ) வெளிநாட்டுச் செலாவணியில் அல்லது இலங்கை ரூபாய்களில் (உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள், உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகள், உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பெனிகள், விசேடித்த குத்தகைக் கம்பெனிகள் மற்றும் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பெனிகள் மற்றும் கடல் கடந்த கம்பெனிகள் தவிர வேறு) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனிகளிற்கு மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆண்டு காலப்பகுதி ஒன்றுக்கு கடன்பிணையங்களில் முதலீடுசெய்தல் மற்றும் கடன்களை வழங்குதல்;

(ஈ) இயைபான ஒழுங்குபடுத்தும் அதிகாரிகளின் அங்கீகாரத்திற்கு அமைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள், உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகள், உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பெனிகள், விசேடித்த குத்தகைக் கம்பெனிகள் என்பவற்றினால் வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கை ரூபாய்களில் வழங்கப்பட்ட தனிசுப் பிணையங்களிற்கு கடன் வழங்கல் அல்லது தனிசுப் பிணையங்களில் முதலீடு செய்தல்.

(உ) வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தில் உள்ள ஏற்பாடுகள் அல்லது மட்டுப்பாடுகளுக்கு அமைய -

(i) கூறு நம்பிக்கைப் பொறுப்புக்களிலான கூறுகளிலான முதலீடு.
(ii) அரசாங்கப் பிணையங்கள் (திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள்)
(iii) இலங்கையின் மத்திய வங்கியினாலும் அல்லது வேறு ஏதேனும் நியதிச் சட்டக் குழுவினாலும் வழங்கப்பட்ட பிணையங்கள்.
(iv) இலங்கை அபிவிருத்தி முறிகள் (இ.அ.மு.கள்);
(v) உரிமமளிக்கப்பட்ட நிதி நிறுவனங்களிலுள்ள வைப்புக்கள்;
(vi) அசைவற்ற ஆதனங்கள்; அல்லது
(vii) அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு எவையேனும் முதலீட்டு வகுதிகள்.

2. மேலுள்ள அ என்னும் தலைப்பின் கீழ் 1 ஆம் பந்தியின் (அ) முதல் (ஊ) வரையான விடயங்களில் குறித்துரைக்கப்பட்டு பொறுப்பேற்கப்பட்ட எல்லா மூலதனக் கொடுக்கல் வாங்கல்களும் பின்வரும் நிபந்தனைகளுக்கமைவாக இருத்தல் வேண்டும் -

(அ) மேலே குறிப்பீடு செய்யப்பட்ட மூலதன முதலீடுகளுக்கெனத் தேவைப்படுத்தப்படும் எல்லா நிதிகளும் அங்கீகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவராக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால், மத்திய வங்கியினால் பெயர்குறிக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கை ரூபாவில் திறத்து பேணப்பட்டுவரும் உட்திரும்பல் வெளிநாட்டுக் கணக்கொன்றினூடாகச் செய்யப்படுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட எல்லா வருமானமும், முதலீடுகளைக் கையாளுவதிலிருந்தான வரும்படிகளும், முதலீடானது எந்த உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கினூடாகச் செய்யப்பட்டதோ, அந்த உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கிற்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும்;

(இ) (இவ்வொழுங்குவிதிகளின் IV ஆம் அட்டவணையின் ஆ என்னும் தலைப்பின் கீழ் 1 ஆம் பந்தியின் 1 ஆம் உட்பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான குடியகல்வோர் புறநீங்கலாக) இலங்கை நாட்டினத்தவரல்லாத ஆளொருவரிடமிருந்து, (IV ஆம் அட்டவணையின் ஆ என்னும் தலைப்பின் கீழ் 1 ஆம் பந்தியின் 1 ஆம் உட்பிரிவில் வரைவிலக்கணம் கூறப்பட்டவாறான குடியகல்வோர் புறநீங்கலாக) இலங்கை நாட்டினத்தவரல்லாத ஆளொருவருக்கு மரபுரிமை என்ற வகையாக மாற்றல் செய்யப்பட்ட எல்லா வருமானங்கள், (வழங்குநரால் செய்யப்படும் கூட்டிணைப்பு நடவடிக்கையொன்றின் பயனைக்கொண்டு அத்தகைய முதலீட்டாளர் மீது வந்துறுகின்ற எவையேனும் அடுத்துப்பின்னரான பங்குகள், உரித்துரிமையொன்றின் பிரயோகம், உரித்துடைமை அல்லது மாற்றுதல் உள்ளடங்கலாக), மேலுள்ள முதலீடுகளின் விற்பனை மீதான வரும்படிகள் என்பன இவ்வொழுங்குவிதிகள் நடைமுறைக்குவரும் திகதிக்கு முன்னர், முதலீடானது இவ்வட்டவணையின் அ என்னும் தலைப்பின் கீழ் 1 ஆம் பந்தியுடன் இணங்கியொழுகி ஆரம்ப முதலீட்டாளரின் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கினூடாக அல்லது பிணையங்கள் முதலீட்டுக் கணக்கொன்றினூடாக (உட்திரும்பல் முதலீட்டுக் கணக்காக மீளப் பெயர் குறிக்கப்பட்ட) உட்திரும்பல் அனுப்புத் தொகை என்ற வகையில் அல்லது வேறு ஏதேனும் கணக்கினூடாக செய்யப்பட்டிருப்பின் பயனுகரியினால் திறக்கப்பட்ட உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினூடாகத் திருப்பியனுப்பப்படலாம்.

(ஈ) இவ்வொழுங்குவிதி பயனுக்குவரும் திகதிக்கு முன்னர் செய்யப்பட்ட எல்லா வருமானங்களும், (வழங்குநரால் செய்யப்படும் கூட்டிணைப்பு நடவடிக்கையொன்றின் பயனைக்கொண்டு அத்தகைய முதலீட்டாளர் மீது வந்துறுகின்ற எவையேனும் அடுத்துப்பின்னரான பங்குகள், உரித்துரிமையொன்றின் பிரயோகம், உரித்துடைமை அல்லது மாற்றுதல் உள்ளடங்கலாக) மேலுள்ள முதலீடுகளின் விற்பனை மீதான வரும்படிகள் என்பன, மூல முதலீட்டுக்கான உட்திரும்பல் அனுப்புதொகை பற்றிய சான்றுகளின் சமர்ப்பிப்புக்கமைய, முதலீட்டாளரால் திறக்கப்பட்ட உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினூடாகத் திருப்பியனுப்பப்படலாம். 2010, சனவரி 1 ஆம் திகதிக்கு முன்னர் செய்யப்பட்ட முதலீடுகளுக்கான முதலீட்டுக்குரிய உட்திரும்பல் அனுப்புதொகையின் சான்றுகள் இல்லாதபட்சத்தில், முதலீட்டின் சொல்லப்பட்ட வரும்படிகளும் ஏதேனும் வருமானமும், அங்கீகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவராக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினாலான அடிப்படைக் கொடுக்கல்வாங்கலின் நல்லெண்ணம் பற்றி திருப்தியுறுவதன்மேல், வதிவற்ற முதலீட்டாளரினால் திறக்கப்பட்ட உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினூடாகத் திருப்பியனுப்பப்படலாம்.

(உ) முதலீட்டைப் பெறும் கம்பெனி, கம்பெனி செயலகங்கள் மற்றும் பங்குத்தரகர்கள், கூறு நம்பிக்கைப் பொறுப்புக்கள், பரஸ்பர நிதியங்கள் அத்துடன் நிதி நிறுவனங்கள் உள்ளடங்கலாக எல்லா சந்தை இடைத்தரகர்களும் உட்பட, இவ்வட்டவணையின் 1 ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட, மூலதனக் கொடுக்கல்வாங்கல்களுடன் ஈடுபடுகின்ற வதிவுள்ள உருவகங்கள், இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்கள் இவ்வட்டவணையின் கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லா தேவைப்பாடுகளுடனும் இணங்கியொழுகி அத்தகைய மூலதனக் கொடுக்கல்வாங்கல்களை நடாத்திச் செல்கின்றனர் என்பதை உறுதிப்படுத்துவதற்குப் பொறுப்பாகும்.

3. தவிர்ப்புக்கள் - இவ்வட்டவணையின் அ என்னும் தலைப்பின்கீழ் 1 ஆம் பந்தியின் 1(அ) என்னும் உட்பந்தியின் கீழான அனுமதியானது, பின்வரும் ஏதேனும் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கு உத்தேசிக்கின்ற அல்லது கொண்டுநடாத்துகின்ற கம்பெனியொன்றின் பங்குகள் தொடர்பில் ஏற்புடையதாகாது.

(அ) அடகு பிடித்தல்;

(ஆ) கரையோர மீன்பிடி;

(இ) இலங்கைக்கு வெளியில் வதிகின்ற ஆட்களினால் பங்களிப்புச் செய்யப்பட்ட மூலதனமொன்று, அத்தகைய முதலீட்டுக்குப் பின்னர் 05 மில்லியன் ஐ.அ.டொலரை விடக் குறைவாக இருக்குமிடத்து சில்லறை வியாபாரம்.

4. வரையறைகள் :

(1) இவ்வட்டவணையின் அ என்னும் தலைப்பின்கீழ் 1 ஆம் பந்தியின் 1 (அ) என்னும் பந்தியின் கீழான அனுமதியானது, பின்வரும் ஏதேனும் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற அல்லது கொண்டுநடாத்த உத்தேசிக்கின்ற பங்குகள் தொடர்பில் அத்தகைய கம்பெனியின் குறிப்பிடப்பட்ட மூலதனத்தின் 40 சதவீதம் வரை மாத்திரம் அல்லது ஏதேனும் கம்பெனியில் வெளிநாட்டு முதலீட்டின் உயர் வீதமொன்றுக்காக இலங்கை முதலீட்டுச் சபையினால் விசேட அங்கீகாரமொன்று வழங்கப்பட்டிருப்பின், அத்தகைய உயர்வீதம் வரை மாத்திரம் ஏற்புடையதாதல் வேண்டும்.

(அ) சர்வதேச ரீதியில் தீர்மானிக்கப்பட்ட அனுமதிப்பங்கு வரையறைகளுக்கமைய இலங்கையின் ஏற்றுமதிகள் உள்ளவிடத்து பொருட்களின் உற்பத்தி.

(ஆ) தேயிலை, இறப்பர், தென்னை, கொக்கோ, அரிசி, சீனி மற்றும் வாசனைத்திரவியங்களை வளர்த்தலும் ஆரம்பப் பதனிடலும்.

(இ) மீள் புதுப்பிக்கத்தகா தேசிய வளங்களின் அகழ்வும் ஆரம்பப் பதனிடலும்.

(ஈ) உள்ளூர் வெட்டுமரங்களைப் பயன்படுத்திச் செய்யப்படும் வெட்டுமரத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள்.

(உ) (கடற்றொழில் என்னும் விடயம் குறித்தொதுக்கப்பட்ட அமைச்சினால் வரையறுக்கப்பட்டவாறாக) ஆழ்கடல் மீன்பிடி.

(ஊ) வெகுசன தொடர்பாடல்.

(எ) கல்வி.

(ஏ) கப்பற்சரக்கு அனுப்புதல்.

(ஐ) பயண முகவர்கள்.

(ஒ) கப்பற்றொழில் முகவர்கள்.

(2) அனுமதியானது, கம்பெனியின் குறிப்பிடப்பட்ட மூலதனத்தின் சதவீதம் வரை மாத்திரம், பின்வரும் ஏதேனும் தொழிலைக் கொண்டுநடாத்துகின்ற அல்லது கொண்டுநடாத்த உத்தேசிக்கின்ற கம்பெனியொன்றின் பங்குகள் தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும்; அதற்காக, அத்தகைய தொழில்களில் வெளிநாட்டு முதலீடுகளுக்கான அங்கீகரத்துக்காக இலங்கை அரசாங்கத்தினால் அல்லது அதற்கென அமைக்கப்பட்ட எவரேனும் சட்ட அல்லது நிருவாக அதிகாரியினால் ஒன்றில் பொதுவான அல்லது விசேடமான அங்கீகாரம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் -

(அ) வான் போக்குவரத்து;

(ஆ) (கடற்றொழில் என்னும் விடயம் குறித்தொதுக்கப்பட்ட அமைச்சினால் வரையறுக்கப்பட்டவாறாக) கரையோர கப்பற்றொழில்;

(இ) 1990 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, கைத்தொழில் ஊக்குவிப்புச் சட்டத்தின் இரண்டாம் அட்டவணையிலுள்ள கைத்தொழில் பொறுப்பு முயற்சிகளான-

(i) ஆயுதங்கள், வெடிமருந்துகள், வெடிபொருட்கள், இராணுவ வாகனங்கள் மற்றும் உபகரணங்கள், வானூர்தி மற்றும் ஏனைய இராணுவ தளபாடங்கள் தயாரிக்கின்ற ஏதேனும் கைத்தொழில்.

(ii) நஞ்சுப் பொருட்கள், போதைப் பொருட்கள், மதுபானம், அபாயகர ஔடதங்கள் மற்றும் நச்சுத்தன்மையுடைய பொருட்கள், தீங்குவிளைவிக்கக்கூடிய அல்லது ஊக்க மருந்துப் பொருட்கள் தயாரிக்கின்ற ஏதேனும் கைத்தொழில்.

(iii) நாணயத் தாள்கள், நாணயக் குற்றிகள் அல்லது பாதுகாப்பு ஆவணங்கள் தயாரிக்கின்ற ஏதேனும் கைத்தொழில்.

(ஈ) பாரியளவில் இயந்திரமயமாக்கப்பட்ட இரத்தினக்கல் அகழ்வு

(உ) லொத்தர்கள்

5. ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, அ என்னும் தலைப்பின் கீழான ஏற்பாடுகளைப் பொருள்கோடல் செய்வதில் ஏற்புடையற்பாலதான பொது நெறி என்பது, மூல முதலீடு இலங்கையினுள் வெளிநாட்டு செலாவணியின் அனுப்பு தொகைகளைப் பயன்படுத்திச் செய்யப்பட்டிருக்கும் எல்லா சந்தர்ப்பங்களிலும் எவையேனும் மூலதன ஈட்டுகைகள் உள்ளடங்கலாக, இப்பந்திகளின் கீழ் அனுமதியளிக்கப்பட்ட முதலீடுகளின் கையுதிர்ப்பிலிருந்து எழுகின்ற வருமானத்தையும் வரும்படிகளையும் முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வெளியே திருப்பியனுப்புதல் வேண்டும் என்பதாக இத்தால் வெளிப்படுத்துகின்றது. முதலீட்டாளரொருவர், இவ்வொழுங்குவிதிகளில் தரப்பட்ட நடவடிக்கைமுறையான தேவைப்பாடுகளிலிருந்து விலகிச்செல்லுகின்றவிடத்து, மத்தியவங்கியானது அங்கீகரிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினூடாக அதற்குச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் மேலும் அவ்விண்ணப்பத்தின் நல்லெண்ணத்தில் திருப்தியுற்றதன் மேலும் இந்நெறிகளுடன் இசைந்தொழுகி முதலீட்டாளர் ஒருவரால் செய்யப்படும் வெளித்திரும்பல் அனுப்புதொகைகளை அதிகாரமளிக்கும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**(ஆ) இலங்கையில் தொழிலிடமொன்றை ஆரம்பித்தலும் தொழிற்படுத்தலும்.**

1. (1) இரண்டாயிரத்து எழாம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பெனியொன்று இலங்கையில் பின்வருவனவற்றைக் கொண்டுநடாத்தலாம் -

(அ) இவ்வட்டவணையின் ஆ என்னும் தலைப்பின் கீழ் 2 ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் தவிர, ஏதேனும் வர்த்தக, வியாபார அல்லது கைத்தொழில் செயற்பாடு; ஆயின் இலங்கை அரசாங்கத்திடமிருந்து அல்லது இவ்வட்டவணையின் ஆ என்னும் தலைப்பின்கீழ் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளுக்கான வெளிநாட்டு முதலீடுகளுக்காக அங்கீகாரம் வழங்குவதற்கெனத் தாபிக்கப்பட்ட ஏதேனும் சட்ட அல்லது நிருவாக அதிகாரியிடமிருந்து முன்னனுமதி பெறப்பட்டிருத்தல் வேண்டும்; அல்லது

(ஆ) இணைப்பு அலுவலகம், பிரதிநிதித்துவ அலுவலகம், பிராந்திய அலுவலகம் அல்லது அதனையொத்த வேறு அலுவலகமொன்றினால் பொறுப்பேற்கப்பட்ட அல்லது கொண்டுநடாத்தப்பட்ட செயற்பாடுகள் போன்ற ஏதேனும் வர்த்தகஞ்சாரா, வியாபாரஞ்சாரா அல்லது கைத்தொழில்சாரா செயற்பாடு; ஆயின், அத்தகைய செயற்பாடுகள் நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ ஏதேனும் வருமானத்தைக் கம்பெனிக்கு வழங்குதலாகாது.

(2) மேலே குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் செயற்பாட்டைப் பொறுப்பேற்கின்ற அல்லது கொண்டுநடாத்துகின்ற, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பெனியொன்று பின்வருவனவற்றைச் செய்தல் வேண்டும்-

(அ) கிளை அலுவலகம், கருத்திட்ட அலுவலகம் அல்லது வேறு அதனையொத்த அலுவலகம் போன்ற தொழிலிடமொன்றின் விடயத்தில், கடல்கடந்த கம்பெனியின் கணக்கில் வரவுவைப்பதற்கென இலங்கையிலுள்ள அங்கீகாரம் பெற்ற அனுமதியளிக்கப்பட்ட வியாபாரியிடம் திறக்கப்பட்ட உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினூடாக வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட அனுப்பு தொகைகளிலிருந்து ஆகக்குறைந்தது 200,000 ஐக்கிய அமெரிக்க டொலர்களை (ஐ.அ.டொ)

அல்லது வேறு பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகையை முதலீடு செய்தலும் அத்துடன் சொல்லப்பட்ட அனுப்புதொகையின் எண்பிப்புக்கான சான்றை பதிவுசெய்யப்பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குள் கம்பெனிகள் பதிவாளர் திணைக்களத்துக்கு வழங்குதலும்.

(ஆ) இணைப்பு அலுவலகம், பிரதிநிதித்துவ அலுவலகம் அல்லது வேறு அதனையொத்த அலுவலகம் போன்ற தொழிடமொன்றின் விடயத்தில், அத்தகைய தொழிலிடத்தை அமைப்பதற்கும் பராமரிப்பதற்கும் தேவையான நிதிகளை, கடல்கடந்த கம்பெனியின் கணக்கில் வரவுவைப்பதற்கென இலங்கையிலுள்ள அங்கீகாரம்பெற்ற அனுமதியளிக்கப்பட்ட வியாபாரியிடம் திறக்கப்பட்ட உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினூடாக அனுப்புதல்.

(3) மேலுள்ள (1) ஆம் உட்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கடல்கடந்த கம்பெனியொன்று, எந்த மார்க்கத்தினூடாக அதன் இலாபம், அரசுரிமைப் பணம், நடத்துரிமம் அல்லது வேறு அதனையொத்த கொடுப்பனவுகள் அல்லது மேன்மிகை நிதிகள், நிகரவரி என்பன அனுப்பப்பட்டதோ அந்த மார்க்கத்தினூடாக அவற்றை தாய்க்கம்பெனியின் உட்திரம்பல் முதலீட்டுக் கணக்கிற்கு இலங்கையிலிருந்து அனுப்பிவைக்கலாம்.

2. இவ்வட்டவணையின் ஆ என்னும் தலைப்பின் கீழ் 1 ஆம் பந்தியின் 1 (அ) என்னும் உட்பந்தியின் நோக்கத்திற்காக, பின்வரும் வர்த்தக, வியாபார மற்றும் கைத்தொழில் செயற்பாடுகள் கடல்கடந்த கம்பெனியொன்றினால் நிறைவேற்றப்படுவதற்கு அனுமதிக்கப்படுதலாகாது.

(அ) (1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்டத்தின் கீழ் இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட வெளிநாட்டு வங்கிகளின் கிளைகள் தவிர) பணம் கடன்கொடுத்தல்;

(ஆ) அடகுபிடித்தல்;

(இ) மூலதனம் இலங்கைக்கு வெளியில் வதியும் ஆட்களினால் பங்களிப்புச் செய்யப்பட்டும், அத்தகைய முதலீட்டின் பின்னர் 5 மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்குக் குறைவாகவும் இருக்குமிடத்து சில்லறை வியாபாரம்;

(ஈ) கரையோர மீன்பிடி/தேயிலை, இறப்பர், தென்னை மற்றும் அரிசி என்பவற்றின் ஆரம்பப் பதனிடுகை;

(உ) தேயிலை, இறப்பர், தென்னை மற்றும் அரிசி என்பவற்றை வளர்த்தலும் ஆரம்பப் பதனிடுதலும்.

(ஊ) மீள் புதுப்பிக்கத்தகா தேசிய வளங்களின் அகழ்வும் ஆரம்பப் பதனிடுதலும்.

(எ) கப்பற்சரக்கு அனுப்புதல்.

(ஏ) கப்பற்றொழில் முகவர் தொழில்.

(ஐ) பாரியளவில் இயந்திரமயமாக்கப்பட்ட இரத்தினக்கல் அகழ்வு; மற்றும்

(ஒ) லொத்தர்கள்.

3. இவ்வட்டவணையின் ஆ என்னும் தலைப்பின் கீழ் 1 ஆம் பந்தியின் 1 (அ) என்னும் உட்பந்தியின் நோக்கத்துக்காக, பின்வரும் செயற்பாடுகள் இலங்கை அரசாங்கத்தின் அல்லது வெளிநாட்டு முதலீடுகளுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கென தாபிக்கப்பட்ட ஏதேனும் சட்ட அல்லது நிருவாக அதிகாரியின் முன்னனுமதியுடன் கொண்டுநடாத்தப்படுவதற்கென அனுமதிக்கப்பட்டுள்ளன -

(அ) சர்வதேச ரீதியில் தீர்மானிக்கப்பட்ட அனுமதிப்பங்கு வரையறைகளுக்கமைய இலங்கையின் ஏற்றுமதிகள் உள்ளவிடத்து பொருட்களின் உற்பத்தி;

(ஆ) சீனி, கொக்கோ மற்றும் வாசனைத் திரவியங்களை வளர்த்தலும் ஆரம்பப் பதனிடுதலும்.

(இ) உள்ளூர் வெட்டுமரங்களைப் பயன்படுத்திச் செய்யப்படும், வெட்டுமரத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள்;

(ஈ) ஆழ்கடல் மீன்பிடி;

(உ) வெகுசன தொடர்பாடல்;

(ஊ) கல்வி;

(எ) வெளிநாடு செல்லும் பயண முகவர் தொழில்;

(ஏ) உள்ளூர் விமானப் போக்குவரத்து;

(ஐ) பின்வருவனவற்றை உற்பத்திசெய்யும் அல்லது தயாரிக்கும் ஏதேனும் கைத்தொழில் -

(i) ஆயுதங்கள், வெடிமருந்துகள், வெடிபொருட்கள், இராணுவ வாகனங்கள் மற்றும் உபகரணங்கள், வானூர்தி மற்றும் ஏனைய இராணுவ தளபாடங்கள் தயாரிக்கின்ற ஏதேனும் கைத்தொழில்.

(ii) நஞ்சுப் பொருட்கள், போதைப் பொருட்கள், மதுபானம், அபாயகர ஔடதங்கள் மற்றும் நச்சுத்தன்மையுடைய பொருட்கள், தீங்குவிளைவிக்கக்கூடிய அல்லது ஊக்க மருந்துப் பொருட்கள் தயாரிக்கின்ற ஏதேனும் கைத்தொழில்.

(iii) நாணயத் தாள்கள், நாணயக் குற்றிகள் அல்லது பாதுகாப்பு ஆவணங்கள் தயாரிக்கின்ற ஏதேனும் கைத்தொழில்.

4. ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, ஆ என்னும் தலைப்பின் கீழான ஏற்பாடுகளைப் பொருள்கோடல் செய்வதில் ஏற்புடையற்பாலதான பொது நெறி என்பது, மூல முதலீடு இலங்கையினுள் வெளிநாட்டு செலாவணியின் அனுப்பு தொகைகளைப் பயன்படுத்திச் செய்யப்பட்டிருக்கும் எல்லா சந்தர்ப்பங்களிலும் எவையேனும் மூலதன ஈட்டுகைகள் உள்ளடங்கலாக, இப்பந்திகளின் கீழ் அனுமதியளிக்கப்பட்ட முதலீடுகளின் கையுதிர்ப்பிலிருந்து எழுகின்ற வருமானத்தையும் வரும்படிகளையும் முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வெளியே திருப்பியனுப்புதல் வேண்டும் என்பதாக இத்தால் வெளிப்படுத்துகின்றது. முதலீட்டாளரொருவர், இவ்வொழுங்குவிதிகளில் தரப்பட்ட நடவடிக்கைமுறையான தேவைப்பாடுகளிலிருந்து விலகிச்செல்லுகின்றவிடத்து, மத்தியவங்கியானது அங்கீகரிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினூடாக அதற்குச் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின் மேலும் அவ்விண்ணப்பத்தின் நல்லெண்ணத்தில் திருப்தியுற்றதன் மேலும் இந்நெறிகளுடன் இசைந்தொழுகி முதலீட்டாளர் ஒருவரால் செய்யப்படும் வெளித்திரும்பல் அனுப்புதொகைகளை அதிகாரமளிக்கும் தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. இவ்வட்டவணையின் நோக்கத்துக்காக-

"மத்திய வங்கி" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பெனிகள்" என்பது, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கி" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பெனி" என்பது, 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழான நிதிக் கம்பெனி எனப்பொருள்படும்;

"உரிமமளிக்கப்பட்ட நிதி நிறுவனம்" என்பது, பின்வருமாறு பொருள்படும் -

(அ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ;
(ஆ) உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கி ;
(இ) 2016 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நுண் நிதியளிப்புச் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட நுண்நிதியளிப்புக் கம்பெனி ;
(ஈ) விசேடித்த குத்தகைக் கம்பெனி ; அல்லது
(உ) உரிமமளிக்கப்பட்ட நிதிக் கம்பெனி.

"அமைச்சர்" என்பது 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டதிலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"பனச்சபை" என்பது 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

"கடல்கடந்த கம்பெனி" என்பது, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"விசேடித்த குத்தகைக் கம்பெனி" என்பது, நிதிக் குத்தகைத் தொழிலைக் கொண்டுநடாத்துவதற்கென 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க, நிதிக் குத்தகைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பெனி எனப்பொருள்படும்;

"இலங்கை அபிவிருத்தி முறிகள்" என்பது, இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இலங்கை மத்திய வங்கியின் பொது தனிசுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட, ஐக்கிய அமெரிக்க டொலர்களில் வகுப்பினப்படுத்தப்பட்ட கடன் சாதனமொன்று எனப்பொருள்படும்.

**அட்டவணை III**

(ஒழுங்குவிதி 2(இ))

நீக்கப்பட்ட செலாவாணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி ஏற்கனவே வழங்கப்பட்ட ஏதேனும் (பொது அல்லது விசேட) அங்கீகாரத்தின் கீழ் பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள்.

இவ்வொழுங்குவிதிகளின் I, II மற்றும் IV ஆம் அட்டவணைகளில் குறித்துரைக்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களை ஒத்ததாகவுள்ள, நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழான, ஏலவேயுள்ள எல்லா கொடுக்கல்வாங்கல்களும், இவ்வொழுங்குவிதிகளால் அல்லது எவையேனும் அடுத்துப்பின்னரான ஒழுங்குவிதிகளால் வேறுபடுத்தப்பட்டாலொழிய, அத்தகைய கொடுக்கல்வாங்கல்களுக்கெனக் குறித்துரைக்கப்பட்ட நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்குமமைய தொடர்ந்திருக்கலாம்.

**அட்டவணை IV**

(ஒழுங்குவிதிகள் 2(2) மற்றும் 4)

வேறு மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள்

கீழே இவ்வட்டவணையின் அ முதல் ஏ வரையிலான தலைப்புக்களின்கீழ் குறித்துரைக்கப்பட்ட எல்லா வேறு மூலதனக் கொடுக்கல்வாங்கல்களும், அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினூடாக அல்லது இந்நோக்கத்துக்கென ஒழுங்குவிதி 2 இன் (2) ஆம் பந்தியின்கீழ் அதிகாரமளிக்கப்பட்டவாறான உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியொன்றினூடாகப் பொறுப்பேற்கப்படுதல் வேண்டும்.

**அ. இலங்கைக்கு வெளியே வதிவுள்ளோரினால் வைத்திருக்கப்பட்ட அசைவற்ற ஆதனங்களின் (காணி மற்றும் கட்டடங்கள்) விற்பனை வரும்படிகளைத் திருப்பியனுப்புதல்.**

1. அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகள் அல்லது ஒழுங்குவிதி 2 இன் (2) ஆம் பந்தியின்கீழ் அதிகாரமளிக்கப்பட்டவாறான உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியொன்று, அத்தகைய கொடுப்பனவுகள், பின்வரும் நோக்கங்களுக்காகவும் இலங்கையில் அசைவற்ற ஆதனத்தின் கொள்ளுதல், சொந்தமாக வைத்திருந்தால் மற்றும் உடைமைகொள்ளுதல் என்பவற்றுக்கு இலங்கைக்கு வெளியே வதிகின்ற அத்தகைய ஆதனத்தின் சொந்தக்காரரால் அல்லது மரபுரிமையாளரால் இலங்கையிலுள்ள அசைவற்ற ஆதனத்தின் விற்பனை தொடர்பில் செலுத்தப்படற்பாலதான பிரதிபயனாக அமைகின்றவிடத்து, இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவருக்கு இலங்கையில் வதிகின்ற ஆளொருவரினால் இலங்கை ரூபாவில் செலுத்தப்பட்ட மூலதன ஈட்டுகைகள், எவையேனுமிருப்பின், உள்ளடங்கலான விற்பனை வரும்படிகளை திருப்பியனுப்புவதற்கு அனுமதியளிக்கப்படுகின்றன -

(அ) அசைவற்ற ஆதனத்தின் மூலக் கொள்ளுதலானது உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கிலுள்ள நிதிகளைப் பயன்படுத்தி செய்யப்பட்டிருப்பின், சொந்தக்காரரின் அல்லது மரபுரிமையாளரின் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றில் வரவு வைத்தல்.

(ஆ) அத்தகைய ஆதனத்தின் மூலக்கொள்ளுதல் மற்றும் அபிவிருத்திக்கான உட்திரும்பல் அனுப்புதொகையின் (சொந்தக்காரரால் அசைவற்ற ஆதனத்தின் கொள்ளுதல் செய்யப்படுவதை வசதிப்படுத்திய, இலங்கையிலுள்ள மூன்றாம் திறத்தவரொருவரின் கணக்கொன்றுக்கு அச்சொந்தக்காரரால் அனுப்பப்பட்ட நிதிகள் உட்பட) எண்பிப்பை நிச்சயப்படுத்தியதன் மேல், சொந்தக்காரரால் அல்லது மரபுரிமையாளரால் இலங்கைக்கு வெளியே பேணப்படுகின்ற கணக்கொன்றில் வரவு வைத்தல்.

**ஆ. புலம்பெயர்ந்தோர் கைமாற்றங்கள் :**

1. (1) இலங்கையில் வதிவுள்ளவொருவராக இருக்கின்றதும், இரட்டைப்பிரசாவுரிமை உட்பட, இன்னொரு நாட்டில் நிரந்தர வதிவுரிமை அல்லது பிரசாவுரிமையைப் பெற்றுக்கொள்ளதுமான, இதனகத்துப் பின்னர் குடியகல்ந்தவரெனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை நாட்டினத்தவரொருவர், புலம்பெயர் படிகளுக்குத் தகுதியுடையவராவார்; அது அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனங்களின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட வரும்படிகள், குடியகல்ந்தவரினால் சொந்தமாக வைத்திருக்கப்படும் உருவ மற்றும் அருவச் சொத்துக்கள் மற்றும் வாழ்க்கைத் துணையிடமிருந்தும் பெற்றோர்களிடமிருந்தும் குடியகல்ந்தவரால் பெறப்பட்ட அன்பளிப்புக்களை உள்ளடக்குகின்றது. சொத்துக்களானவை, விலைமதிப்ற்ற இரத்தினக்கற்கள், விலைமதிப்பற்ற உலோகங்கள், தனிப்பட்ட ஆபரணங்கள் என்பவற்றின் பெறுமதியையும் அத்துடன் பயனுகரிகள் என்றவாறாக மரபுரிமைவழிவந்த மரணச்சொத்துக்கள் உட்பட இலங்கையில் வைத்திருக்கப்பட்ட வேறு சொத்துக்களையும் உள்ளடக்குகின்றது.

(2) பின்வரும் வரையறைகள், மேலுள்ள ஆ என்னும் தலைப்பின் (1) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும் -

(அ) இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கமைய, 18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய தனியாள் ஒருவருக்கு ஐ.அ.டொலர் 200,000 கொண்ட ஆரம்பப் புலம்பெயர் படியொன்று

(ஆ) ஐ.அ.டொலர் 30,000 கொண்ட வருடாந்த புலம்பெயர் படி ஆரம்பப்படியான ஐ.அ.டொலர் 200,000 முழுமையாகப் பயன்படுத்தப்பட்டதிலிருந்து 12 மாதங்கள் கடந்த பின்னர், முதலாவது அத்தகைய வருடாந்தப் படி கைமாற்றத்தக்கதாகும். முதலாவது படிக்கு புறநீங்கலாக, அடுத்துப்பின்னரான படிகள் பஞ்சாங்க ஆண்டொன்றுக்கு கைமாற்றத்தக்கதாக இருத்தல் வேண்டும் என்பதுடன், அவை இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கமைய ஒன்றுதிரளுகையில் கைமாற்றப்பட முடியுமாக இருத்தலும் வேண்டும்.

(இ) இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கமைய, இலங்கையிலுள்ள மரபுவழி ஆதனத்தின் விற்பனையிலிருந்து பெறப்பட்ட வரும்படிகள் என்றவாறாக, வெளிநாட்டு நாட்டினத்தவர்கள் தொடர்பிலான ஐ.அ.டொலர் 30,000 கொண்ட வருடாந்தப் படியொன்று.

(3) புலம்பெயர் படியானது, அங்கீகரிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிடம் அல்லது ஒழுங்குவிதி 2 இன் (2) ஆம் பந்தியின்கீழ் அதிகாரமளிக்கப்பட்டவாறான உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியொன்றிடம் திறக்கப்பட்ட, மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கு (மூ.கொ.ரூ.க) ஒன்றினூடாக வெளியில் அனுப்பப்படுதல் வேண்டும்.

(4) அங்கீகரிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் அல்லது ஒழுங்குவிதி 2 இன் (2) ஆம் பந்தியின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டவாறான உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியொன்றினால் அங்கீகாரமளிக்கப்பட்டவாறான தகுதியுடைய புலம்பெயர் படியானது, மூலதனக் கொடுக்கல்வாங்கல் கணக்கிலிருந்து விண்ணப்பகாரரின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குக்கு மற்றும் /அல்லது இலங்கையிலுள்ள உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குக்கு அல்லது இலங்கைக்கு வெளியே பேணப்படும் குடியகல்ந்தவரின் கணக்கொன்றுக்கு மாற்றப்பட முடியும்.

(5) (வட்டி, பங்கிலாபங்கள், ஓய்வூதியங்கள், வாடகை, குத்தகை வாடகைகள் மற்றும் இலாபங்கள் உள்ளடங்கலான) நடைமுறை வருமானம் அத்துடன் (ஊழியர் சேமலாப நிதியம் (ஊ.சே.நி) ஊழியர் நம்பிக்கை நிதியம் (ஊ.ந.நி) மற்றும் பணிக்கொடை போன்ற) ஓய்வுகால தன்மைகள், மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபா கணக்குக்கு வரவுவைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவை, புலம்பெயர் படிக்கு மேலதிகமாக, தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு மற்றும்/ அல்லது இலங்கையிலுள்ள உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கிற்கு அல்லது இலங்கைக்கு வெளியே குடியகல்ந்தவரினால் பேணப்படும் கணக்கொன்றிற்கு மாற்றப்பட முடியும்.

2. இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட குடியகல்ந்தவர்கள் மற்றும் /அல்லது வெளிநாட்டவர்களுக்கென, வெளிநாட்டு நாணயத்தில் பெறப்பட்ட மரபுவழிச் சொத்துக்களின் வரும்படிகள்/வருமானம், எவையேனுமிருப்பின், அவற்றை வரவுவைக்கும் நோக்கத்திற்காக அத்தகைய ஆட்கள், ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் இலங்கை மத்திய வங்கியின் முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**இ. இலங்கைக்கு வெளியே வதிபவர்களுக்கு இலங்கையில் கடன்களையும் முற்பணங்களையும் வழங்குதல்.**

அங்கீகரிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி அல்லது ஒழுங்குவிதி 2 இன் (2) ஆம் பந்தியின்கீழ் அதிகாரமளிக்கப்பட்டவாறான உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியொன்று, கீழே தரப்பட்டுள்ளவாறான ஆட்களின் வகுதியினருக்கு குறித்தசில நோக்கங்களுக்காக வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கை ரூபாவில் கடன்களையும் முற்பணங்களையும் வழங்கலாம்.

1. இன்னொரு நாட்டில் நிரந்தர வதிவுரிமை (நி.வ) விசாவில் இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கையர்களும் இரட்டைப் பிரசாவுரிமையைக் கொண்டுள்ள பிரசைகளும்.

(1) கடன்கள், இலங்கையிலுள்ள வதிவிட ஆதனமொன்றின் கொள்ளல்/நிர்மாணித்தல் அபிவிருத்தி செய்தல் மற்றும் புனரமைத்தல் நோக்கத்திற்காக, வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கை ரூபாவில் வழங்குப்படுதல் வேண்டும்.

(2) வெளிநாட்டு நாணயக் கடன்கள், கடன்பெறுநர் கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு வெளிநாட்டு நாணய உழைப்புக்களைக் கொண்டிருப்பின் மாத்திரமே வழங்கப்படுதல் வேண்டும்.

(3) கடன்பெறுநர், கடன்வரும்படிகளை வதிவிட ஆதனத்தை விற்கின்ற இலங்கையில் வதிகின்ற ஆட்களினால் பேணப்படும் வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளுக்குக் கைமாற்றக் கோரினாலேயொழிய, கடன்வரும்படிகள் இலங்கை ரூபாவிலேயே பிரித்துக்கொடுக்கப்படுதல் வேண்டும்; ஆயின், அத்தகைய ஆட்கள் வெளிநாட்டு நாணயத்தை ஏற்றுக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(4) வெளிநாட்டு நாணயத்தில் வழங்கப்பட்ட கடன்கள், வெளிநாட்டு நாணய உட்திரும்பல் அனுப்புதொகைகள் மூலம் அல்லது, கடன்பெறுநரின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலும் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளிலும் கிடைக்கப்படற்பாலதானதாகவுள்ள நிதிகளைப் பயன்படுத்துவதன் மூலம் திருப்பிச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(5) இலங்கை ரூபாவில் வழங்கப்பட்ட கடன்கள், வெளிநாட்டு நாணய உட்திரும்பல் அனுப்புதொகைகள் மூலம் அல்லது தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலும் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளிலும் கிடைக்கப்படற்பாலதானதாகவுள்ள நிதிகளைப் பயன்படுத்துவதன் மூலமும் கடன்பெறுநரின் இலங்கை ரூபா உழைப்புக்களைப் பயன்படுத்துவதன் மூலமும் திருப்பிச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(6) (தவறுகையின்) இலங்கை ரூபாவிலான வெளிநாட்டு நாணயக் கடன்களின் அறவிடுதல்களானவை, (திருத்தப்பட்டவாறான) 2008 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகளின் நியதிகளுக்கிணங்க, ஆகக் குறைந்தது கீழ்நிலைக் கடன் வகுதியில் செயல் நிறைவேற்றப்படாதவாறாக வகுப்பாக்கம் செய்யப்பட்டுள்ளதான அத்தகைய கடன்களின் ஒரு கட்டத்தில் மாத்திரமே பின்வருமாறு நிறைவேற்றப்படுதல் வேண்டும் :

(அ) முதலாவதாக, கடன்பெறுநரின் வெளிநாட்டு நாணயச் சொத்துக்களுக்கூடாக

(ஆ) இரண்டாவதாக, ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் அல்லது வேறு உள்நாட்டுச் சொத்துக்களின் விற்பனையிலிருந்து தேறிப்பெறப்படும் வரும்படிகளுக்கூடாக

(இ) இறுதி எதிருரையாக, இலங்கை ரூபாவிலான வரும்படிகள், ஏதேனும் எஞ்சியுள்ள கடன்மீதிகளைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்ற தொகையின் அளவு வரை மாத்திரம் மாற்றப்படுதல் வேண்டும்.

2. (குடியகல்ந்தவர்கள் தவிர) வெளிநாட்டில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ள இலங்கையர்கள்

(1) இலங்கையில் ஏதேனும் நோக்கத்துக்காக, கடன்களும் முற்பணங்களும், அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து அல்லது ஒழுங்குவிதி 2 இன் (2) ஆம் பந்தியின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டவாறான உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியொன்றிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் அல்லது இலங்கை ரூபாவில் பெறப்படுதல் வேண்டும். ஆயின் கடன் பெறுனர் அத்தகைய கடன்களை வெளிநாட்டு நாணயத்தில் சேமிப்பதற்கான ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) அத்தகைய கடன்களை வழங்குவதற்கு முன்னர், அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று அல்லது ஒழுங்குவிதி 2 இன் (2) ஆம் பந்தியின்கீழ் அதிகாரமளிக்கப்பட்டவாறான உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியொன்று அத்தகைய கடனின் கடன் ஆபத்தை மதிப்பிடுதல் வேண்டும்.

(3) வெளிநாட்டு நாணயத்திலான /இலங்கை ரூபாவிலான கடன்களும் முற்பணங்களும், இறையிலிப்பற்று ஆதனம் (காணி மற்றும் கட்டடங்கள்) மீதான ஓர் ஈட்டு வடிவத்தில் அல்லது வெளிநாட்டு நாணய வைப்புக்கள் /சொத்துக்கள் மீதான சோந்தை வடிவத்தில் போதுமானளவு பாதுகாப்பைப் பெற்றுக்கொண்டதன் மேல் வழங்கப்படுதல் வேண்டும்.

(4) கடன்களின் காலமானது, கடன்பெறுநரின் வெளிநாட்டுத் தொழில் நிகழக்கூடிய காலத்தை அடிப்படையாகக் கொண்டு முடிவுசெய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய கடன்கள், வங்கிகளால் வழமையாகப் பின்பற்றப்படுகின்ற நடவடிக்கைமுறைகளுக்கிணங்க பிரித்துக்கொடுக்கப்படுதலும் வேண்டும்.

(5) கடன்பெறுநர், வெளிநாட்டு நாணயக் கடன்வரும்படிகளை வதிவிட ஆதனத்தை விற்கின்ற இலங்கையில் வதிகின்ற ஆட்களினால் பேணப்படும் வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்குக் கைமாற்றக் கோரினாலேயொழிய, கடன்வரும்படிகள் இலங்கை ரூபாவிலேயே பிரித்துக்கொடுக்கப்படுதல் வேண்டும்; ஆயின், அத்தகைய ஆட்கள் வெளிநாட்டு நாணயத்தை ஏற்றுக்கொள்வதற்கு வழங்கப்பட்டுள்ளனர்.

(6) வெளிநாட்டு நாணயத்தில் வழங்கப்பட்ட கடன்கள், உட்திரும்பல் அனுப்புதொகைகள் அல்லது கடன்பெறுநரின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலுள்ளமீதி மூலமாக வெளிநாட்டு நாணயத்தில் திருப்பிச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(7) இலங்கை ரூபாவில் வழங்கப்பட்ட கடன்கள், கடன்பெறுநர் நாட்டுக்கு வெளியே வேலைக்கமர்த்தப்பட்டுள்ள காலம் வரை, சொல்லப்பட்ட கடன்பெறுநரின் தனிப்பட்ட வெளிநாட்டுநாணயக் கணக்குகளில் கிடைக்கப்படற்பாலனவாகவுள்ள நிதிகளிலிருந்து மாத்திரம் அளிக்கப்படுதல் வேண்டும் இக்கடன்கள், கடன்பெறுநர்

கடல்கடந்த வேலைவாய்ப்பு ஒப்பந்தத்தை முடித்துக்கொண்ட பின்னர் இலங்கைக்குத் திரும்பி வந்திருப்பின் மாத்திரம் அக்கடன்பெறுநருக்கு இலங்கை ரூபாவில் அளிக்கப்படலாம்.

(8) (தவறுகையில்) இலங்கை ரூபாவிலான வெளிநாட்டு நாணயக் கடன்களின் அறவிடுதல்களானவை, (திருத்தப்பட்டவாறான) 2008 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, வங்கித்தொழில் சட்ட பணிப்புரைகளின் நியதிகளுக்கிணங்க, ஆகக் குறைந்தது கீழ்நிலைக் கடன் வகுதியில் செயல் நிறைவேற்றப்படாதவாறாக வகுப்பாக்கம் செய்யப்பட்டுள்ளதான அத்தகைய கடன்களின் ஒரு கட்டத்தில் மாத்திரமே பின்வருமாறு நிறைவேற்றப்படுதல் வேண்டும் :

(அ) முதலாவதாக, கடன்பெறுநரின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்களில் உள்ள வெளிநாட்டு நாணயச் சொத்துக்கள்/வைப்புக்கள்/மீதிகளுக்கூடாக;

(ஆ) இரண்டாவதாக, கடன்பெறுநரின் ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் அல்லது வேறு உள்நாட்டுச் சொத்துக்களின் விற்பனையிலிருந்து தேறிப்பெறப்படும் வரும்படிகளுக்கூடாக; அத்துடன்

(இ) இறுதி எதிருரையாக, இலங்கை ரூபாவிலான வரும்படிகள், ஏதேனும் எஞ்சியுள்ள கடன்மீதிகளைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவைப்படுகின்ற தொகையின் அளவு வரை மாத்திரம் மாற்றப்படுதல் வேண்டும்.

***(ஈ) கடல்கடந்த நாடொன்றில் கல்வியைத் தொடர்கின்ற இலங்கை மாணவர்களினால் பெறப்படும் கடன்பெறுகைகள்.***

1. கல்விசார் நோக்கத்துக்கென இலங்கைக்கு வெளியே சென்றுள்ள எவரேனும் இலங்கைப்பிரசை, வெளிநாட்டில் கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்கும் பொழுது கற்றல் /வாழ்க்கைச் செலவுகளை எதிர்கொள்வதற்கென வெளிநாடுகளிலுள்ள வங்கிகள், நிதிநிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் அல்லது கல்வி நிறுவனங்களிடமிருந்து கடன்பெறுவதற்கும் அத்துடன், அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினூடாக அல்லது ஒழுங்குவிதி 2 இன் (2) ஆம் பந்தியின்கீழ் அதிகாரமளிக்கப்பட்டவாறாக உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியொன்றினூடாக இலங்கையிலிருந்து நிதிகளை அனுப்புவதன் மூலம் அத்தகைய கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்கும், அனுமதியளிக்கப்பட்டுள்ளார்.

2. அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கியொன்று அல்லது ஒழுங்குவிதி 2 இன் (2) ஆம் பந்தியின்கீழ் அதிகாரமளிக்கப்பட்டவாறாக உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் விசேடித்த வங்கியொன்று, கொடுக்கல்வாங்கலின் நல்லெண்ணத்தைச் சரிபார்த்த பின்னர், கல்விசார் நோக்கத்துக்கென இலங்கைக்கு வெளியே சென்றுள்ள அத்தகைய இலங்கைப் பிரசைகளின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்களினால் சொல்லப்பட்ட கடன்கள் திருப்பிச் செலுத்தப்படுவதற்கென அந்தந்தக் கடன்கொடுக்கும் நிறுவனங்களுக்கு உட்திரும்பல் அனுப்புதொகைகளைச் செய்யலாம்.

**உ. நிதிசார் பெறுதிக் கொடுக்கல்வாங்கல்களுடன் தொடர்புடைய கொடுப்பனவுகள் :**

அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கி, இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின்படி அத்தகைய அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்களின் நல்லெண்ணம் பற்றி திருப்தியுற்றதன் பின்னர், வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அனுமதியளிக்கப்பட்ட நடப்புக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் (அடிப்படைக் கொடுக்கல்வாங்கல்கள்) தொடர்பிலான நிதிசார் பெறுதித் திட்டங்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியில் கொடுப்பனவுகளைச் செய்யலாம்.

**ஊ. பண்டங்களின் ஏற்றுமதியாளர்களால் இலங்கைக்கு ஏற்றுமதி வரும்படிகள் திருப்பியனுப்பப்படுதல்.**

1. பண்டங்களின் ஏற்றுமதியாளர் ஒவ்வொருவரும், பண்டங்களின் ஏற்றுமதிக்காகப் பெறப்பட்ட கொடுப்பனவுகளை, ஏற்றுமதித் திகதியிலிருந்து 120 நாட்களுக்குள் இலங்கைக்குத் திருப்பியனுப்புதல் வேண்டும்.

2. நூற்றியிருபது நாட்கள் முடிவடைந்ததன் பின்னர், மேலுள்ள தேவைப்பாட்டின் எவையேனும் மீறல்களுக்கெதிராக ஏதேனும் வழக்கைத் தொடுக்கும் முன்னர் 30 நாட்களைக் கொண்ட பிரிவுக்காலப்பகுதியொன்று இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படலாம்.

3. பண்டங்களின் ஏற்றுமதியாளர் ஒவ்வொருவரும், ஒவ்வொரு ஏற்றுமதியின் மீதான தொடர்புடைய ஆவணச் சான்றை கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளும் அந்தந்த அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு அல்லது ஒழுங்குவிதி 2 இன் (2)ஆம் பந்தியின்கீழ் அதிகாரமளிக்கப்பட்டவாறாக உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியொன்றுக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**எ. இலங்கையில் வதியும் ஆளொருவர் வதியாதவர்சார்பில் நிதியியல் உத்தரவாதங்களை வழங்குதல்**

*1. வங்கி உத்தரவாதங்கள், முறிகள் அல்லது துணைநில் கடன் பத்திரங்கள்.*

*(1) இரண்டாம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக அல்லது அதிகாரமளிக்கப்பட்டதான உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும் மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தகவங்கிகளிற்கு வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கு அமைய மூலதன் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் பின்வரும் வங்கி உத்தரவாதங்கள் முறிகள் அல்லது துணைநிலை கடன்பத்திரங்கள் வழங்குவதற்கும் புதிப்பிப்பதற்கும் அனுமதிக்கப்படுகின்றது -*

*(அ) உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் அல்லது உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகளின் அட்டை நிலையங்கள் சார்பில் உறுப்பாண்மை மீதான உறுப்பினர்களின் கடப்பாடுகள் பற்றிய கொடுப்பனவுகளையும் விசா செலவின் மீள்பெறுவனவையும் பிணையளிப்பதற்கு பிணையுறுதியாக வங்கி உத்தரவாதங்கள்;*

(ஆ) கேள்விப்பத்திரம் விலைகோரல் அல்லது ஒப்பந்தத்தில் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய இலங்கையில் வதிவுள்ள ஆளொருவரினால் பொறுப்பேற்கப்பட்ட கடல்கடந்த ஒப்பந்தங்கள் தொடர்பில் இலங்கைக்கு வெளியே வதிவுள்ள ஆளொருவரின் சார்பில் இலங்கையில் வதிவுள்ள ஆளொருவரின் சார்பாக வழங்குவதற்கு தேவைப்படும் விலைகுறிப்பிட்ட முறிகள், செயலாற்றுகை முறிகள், முற்பணக்கொடுப்பனவு உத்தரவாதங்கள் சொல்லப்பட்ட நோக்கங்களுக்காக தேவைப்படும் வேறு ஏதேனும் உத்தரவாதங்கள் ஒப்பந்தமொன்றுக்கு ஆகக்கூடியது மில்லியன் அமெரிக்க டொலர் வரையறைவரை வழங்கப்படல் வேண்டும்.

(இ) இரண்டாம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக அல்லது அதிகாரமளிக்கப்பட்டவாறு உரிமமளிக்கப்பட்டவாறு உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு ஏற்றுக்கொள்ளப்படற்பாதான மதிப்பீட்டுடன் இலங்கைக்கு வெளியே புகழ்பூத்த சர்வதேச வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட இலங்கைக்கு வெளியே வதிவுள்ளவராகவுள்ள முதன்மைக் கடப்பாட்டாளரிடமிருந்து ஒத்த பதங்கள் மீது எதிர் உத்தரவாதம் ஒன்றைப் பெறுவதற்கு அமைய இலங்கையில் ஒப்பந்தமொன்று தொடர்பில் இலங்கையில் வதிவுள்ள ஆள் சார்பில் இலங்கைக்கு வெளியே வதிகின்றவரான முதன்மைக் கடப்பாட்டாளர் ஒருவர் சார்பிலான ஒரு உத்தரவாதம்;

(ஈ) இரண்டாம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக அல்லது அதிகாரமளிக்கப்பட்டதான உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கி ஒன்றாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிக்கு ஏற்புடையற்பாலதான மதிப்பீட்டுடன் இலங்கைக்கு வெளியே புகழ்பூத்த சர்வதேச வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட இலங்கைக்கு வெளியே வதியுள்ள முதன்மைக் கடப்பாட்டாளரிடமிருந்து ஒத்த பதங்கள் மீது எதிர் உத்தரவாதத்தை பெறுவதற்கு அமைய இலங்கையிலுள்ள முகவரின் வேண்டுகோளின்படி இலங்கையிலுள்ள ஒப்பந்தம் தொடர்பில் இலங்கையில் வதிவுள்ள ஆளொருவரின் சார்பாக முதன்மைக் கடப்பாட்டாளர் இலங்கைக்கு வெளியே வதிவுள்ள ஆளொருவராக இருக்கும் பட்சத்தில் அத்துடன் உத்தரவாதம் ஒன்று இலங்கையில் அவரது முகவரியினால் வழங்கப்படவேண்டியதாக இருக்கும் பட்சத்திலும் உள்ள உத்தரவாதம் ஒன்று

(உ) இலங்கையில் கூட்டிணைப்புச் செய்யப்பட்ட கம்பெனியொன்று (முதலீட்டாளர்), இலங்கைக்கு வெளியே கூட்டிணைப்புச் செய்யப்பட்ட எக்கம்பெனியில் சொல்லப்பட்ட முதலீட்டாளர் பங்குதாரொருவராகவுள்ளாரோ அக்கம்பெனி (முதலீடுபெறுபவர்), நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி முதலீட்டைச் செய்திருப்பின், அம்முதலீடு பெறுபவர், ஐ.அ.டொலர் 1,000,000 என்னும் ஆகக்கூடிய வரையறைக்கமைய கூட்டிணைப்புச் செய்யப்பட்ட நாட்டிலுள்ள நிதி நிறுவனங்களிலிருந்து வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இயலச் செய்வதற்கான வங்கி உத்தரவாதமொன்றை வழங்குவதற்குத் தேவைப்படுத்தப்படும் பட்சத்தில் செய்யப்படும் ஓர் உத்தரவாதம் உத்தரவாதப் பெறுமதியானது, கொடுக்கப்பட்ட ஏதேனும் நேரத்தில் சொல்லப்பட்ட முதலீடு பெறுபவரிடத்திலுள்ள முதலீட்டாளரின் பங்குரிமை நூற்றுவீதத்துக்கான விகிதாசாரமாக இருத்தல் வேண்டும்.

(ஊ) இலங்கையில் கூட்டிணைப்புச் செய்யப்பட்ட கம்பெனியொன்று (முதலீட்டாளர்), எந்த நாட்டில் அதன் கிளையைத் தாபித்துள்ளதோ அந்த நாட்டிலுள்ள நிதி நிறுவனங்களிலிருந்து வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கென சொல்லப்பட்ட முதலீட்டாளரால் இலங்கைக்கு வெளியே தாபிக்கப்பட்ட அக்கிளையை இயலச்செய்வதற்கான வங்கி உத்தரவாதமொன்றை வழங்குமாறு தேவைப்படுத்தப்படும் பட்சத்தில், முதலீடானது, நீக்கப்பட்ட செலாவணி; சட்டத்தினதோ அல்லது இச்சட்டத்தினதோ ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி முதலீட்டாளரால் இலங்கைக்கு வெளியே தாபிக்கப்பட்ட கிளையொன்றில் செய்யப்பட்டிருப்பின், சொல்லப்பட்ட கிளையொன்றுக்கு ஐ.அ.டொலர் 500,000 வரையான உத்தரவாதமொன்று வழங்கப்படலாம்.

(எ) இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவர், ஒப்பந்தகாரரொருவராக இலங்கையில் கருத்திட்டமொன்றைப்

பொறுப்பேற்கின்ற பட்சத்திலும் இலங்கையில் வதிகின்ற ஆளொருவர் கீழொப்பந்தகாரரொருவர் என்ற ஆற்றலில், சொல்லப்பட்ட ஒப்பந்தக்காரர் சார்பில் உத்தரவாதமொன்றை வழங்குவதற்குத் தேவைப்படுத்தப்படும் பட்சத்திலும், விலைகூறல் முறிகள், செயல்நிறைவேற்றுகை முறிகள், முற்பணக் கொடுப்பனவு உத்தரவாதங்கள் என்பவற்றை கேள்விமனு அல்லது விலைமனுவில் விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய வழங்கலாம். சொல்லப்பட்ட நோக்கத்துக்கென தேவைப்படுத்தப்பட்ட எவையேனும் வேறு உத்தரவாதங்கள், ஒப்பந்தமொன்றுக்கு ஆகக்கூடிய வரையறை ஐ.அ.டொலர் 1,000,000 வரையில் வழங்கப்படுதல் வேண்டும்.

(ஏ) இரு திறத்தவர்களுக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை ஒன்றுக்கமைய (முகவர் உடன்படிக்கை), இலங்கைக்கு வெளியே கூட்டிணைப்புச் செய்யப்பட்ட கம்பெனியொன்றின் (முதல்வர்) முகவரொருவராக, இலங்கையில் கூட்டிணைப்புச் செய்யப்பட்ட கம்பெனியொன்று தொழிற்படும் பட்சத்தில் உத்தரவாதமொன்று, சொல்லப்பட்ட முகவர் ஒப்பந்தத்தில் தேவைப்படுத்தப்பட்டவாறாக ஐ.அ.டொலர் 2,000,000 ஐக் கொண்ட ஆகக்கூடிய தொகையொன்றுக்கு முதவல்வருக்கு ஆதரவாக முகவர் சார்பில் வழங்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டிணை உத்தரவாதங்கள்

(1) முதலீட்டு பெறுநர் கூட்டிணைக்கப்பட்டுள்ள நாட்டில் நிதிநிறுவனங்களிலிருந்து வசதிகளைத் திரட்டுவதற்கு, சொல்லப்பட்ட முதலீட்டாளர் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட எக்கம்பெனியில் பங்குதாரரொருவராகவுள்ளாரோ அக்கம்பெனியை (முதலீட்டுபெறுநர்) இயலச்செய்வதற்கு, கூட்டிணை உத்தரவாதமொன்றை வழங்குமாறு இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்று (முதலீட்டாளர்) தேவைப்படுத்தப்படும் பட்சத்தில், இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்று, முதலீடானது, நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அல்லது இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி சொல்லப்பட்ட முதலீட்டுபெறுநரில் செய்யப்படும் அத்துடன் கம்பெனியின் நிதிசார் பலமானது கூட்டிணை உத்தரவாதத்தின் பொறுப்பினை மீட்பதற்கு போதுமானதாகவிருப்பின், ஐ.அ.டொலர் 1,000,000 என்னும் ஆகக்கூடிய வரையறைக்கமைய கூட்டிணை உத்தரவாதமொன்றை வழங்குவதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும் கம்பெனியின் பணிப்பாளர்கள் சபையானது, கூட்டிணை உத்தரவாதத்திலிருந்து எழுகின்ற ஏதேனும் எதிர்பாராத பொறுப்பை எதிர்கொள்வதற்கான நிதிசார் பலத்தை கம்பெனி கொண்டுள்ளதென்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும். உத்தரவாதப்பெறுமதியானது, கொடுக்கப்பட்ட ஏதேனும் நேரத்தில் சொல்லப்பட்ட முதலீட்டு பெறுநரில் முதலீட்டாளருக்குள்ள பங்குரிமையின் நூற்றுவீதத்தின் விகிதாசாரமாக இருத்தல் வேண்டும்.

(2) மேலே (1)ஆம் உப்பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட கம்பெனிகள், மேலுள்ள அனுமதியின்கீழ் வழங்கப்பட்ட ஒவ்வொரு கூட்டிணை உத்தரவாதம் பற்றிய விபரங்களை (கூட்டிணை உத்தரவாதத்தினதும் இயைபான சபைத் தீர்மானத்தினதும் பிரதிகள்), சொல்லப்பட்ட உடன்படிக்கை பயனுக்குவரும் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் இலங்கை மத்திய வங்கியின் வெளிநாட்டு செலாவணித் திணைக்களத்தின் தலைவருக்கு கொடுத்துதவுமாறு தேவைப்படுத்தப்படுகின்றன.

3. மேலே 1 ஆம் மற்றும் 2 ஆம் பந்திகளின் நோக்கத்திற்காக -

(அ) இரண்டாம் ஒழுங்குவிதியின் (2) ஆம் பந்தியின்கீழ் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக அல்லது அதிகாரமளிக்கப்பட்டதான உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி ஒவ்வொன்றும் மேலே குறிப்பீடு செய்யப்பட்ட உத்தரவாதங்கள் தொடர்பில் வலிதான கோரிக்கைகளிலிருந்து எழுகின்ற வெளித்திரும்பல் அனுப்பு தொகைகளைச் செய்வற்கு அனுமதிக்கப்பட்டதும் ஆகும். அத்துடன் ஆகக்கூடிய கோரிக்கை வரையறையானது அடிப்படை வசதியின் நிலுவையான கடப்பாடுகளிற்கு விதிதாசாரமான முறையில் அல்லது குறைவான முறையில் இருத்தல் வேண்டும்.

(ஆ) மேலேயுள்ள வரையறைகளை விஞ்சுகின்றதும் மேலேயுள்ள வகுதிகளின் கீழ் வராததுமான ஏதேனும் உத்தரவாதம் இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழான பணச்சபையின் விசேட அங்கீகாரம் ஒன்றுடன் தேவைப்படுத்தவேண்டும். இதன்பொருட்டு விண்ணப்பமொன்று மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி திணைக்களத்தின் தலைவருக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**ஏ. மூன்றாம் ஒழுங்குவிதியின்கீழ் இலங்கைக்கு வெளியே வங்கி ஒன்றுடனான கணக்கொன்றை திறப்பதற்கு, பேணுவதற்கு மற்றும் தொழிற்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்ட ஆட்கள்.**

பின்வரும் ஆட்கள் இலங்கைக்கு வெளியே வங்கி ஒன்றுடனாகி வெளிநாட்டுச் செலாவணிக் கணக்கொன்றை திறப்பதற்கு பேணுவதற்கு தொழிற்படுத்துவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள் -

(அ) தொழிலுக்காக, கல்விக்காக அல்லது மருத்துவ நோக்கங்களுக்காக தற்கலிகமாக இலங்கையை விட்டுச் சென்றுள்ள இலங்கையில் வதிவுள்ள ஆளொருவர்,

(ஆ) இலங்கைக்கு வெளியே உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில் சேவையை வழங்குகின்ற தனியாள் ஒருவர் அல்லது இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட கம்பெனி அல்லது குழுமம் ஒன்று

(இ) இலங்கைக்கு வெளியே முதலீடு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டிருந்த தனியாளொருவர் அல்லது அமைச்சரினால் அனுமதிக்கப்பட்ட இருந்த இலங்கையில் பதிவு செய்யப்பட்ட கம்பெனி அல்லது குழுமம் ஒன்று

(ஈ) வியாபாரப் பொருள்களின் ஏற்றுமதியாளர்

(உ) இன்னொரு நாட்டிலிருந்து செல்லுபடியாகும் நிரந்தர வதிவிட அனுமதியைப் பெற்றுள்ள ஆளொருவர்

(ஊ) இரட்டைப் பிரசாவுரிமை; அத்துடன்

(எ) ஆளொருவர் விசா வழங்வதற்கான நிபந்தனை ஒன்றாக அத்தகைய நாட்டிலுள்ள வங்கி ஒன்றுடன் கணக்கொன்றைத் திறப்பதற்கு மற்றும் பேணுவதற்கு ஆன அதிகாரத்தை வழங்கும் விசாவை தேவைப்படுத்துமிடத்து நாடொன்றில் கற்பதற்காக இலங்கைக்கு வெளியே செல்லுவதற்கு உட்கருதுகின்ற இலங்கையிலுள்ள வதிவுள்ள ஆளொருவர்.

**1.** இவ்வட்டவணையின் நோக்கத்திற்காக -

"மத்திய வங்கி" ஆனது 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தில் உள்ளவாறு அதே கருத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

"ஊழியர் சேமலாப நிதியம்" என்பது 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய சட்டத்தினால் தாபிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதியம் எனப் பொருள்படும்.

"ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பது 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியத்தினால் தாபிக்கப்பட்ட ஊழியர் நம்பிக்கை நிதியம் எனப்பொருள்படும்;

"அமைச்சர்" என்பவர் 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டு செலவாணிச் சட்டத்தில் உள்ளவாறு அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்

"பணச்சபை" ஆனது 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ச.வ.பி. 10/2017

**2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

ரணில் விக்ரமசிங்க,
தேசியக் கொள்கைகள் மற்றும்
பொருளாதார அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2017, நவெம்பர் 17.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2017 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணி (மூலதனக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற நோக்கத்துக்காகக் கணக்குகளைத் திறத்தலும் பேணுதலும்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

**பாகம் I**

**கணக்குகளைத் திறப்பதற்கான அதிகாரம்**

2. பின்வரும் ஆட்கள் மூலதனக் கொடுக்கல்வாங்கல்களைக் கையாள்வதற்கு எவரேனும் ஆளின் பெயரில் வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளை அல்லது இலங்கை ரூபாக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அதிகாரம் கொண்டவர்களாதல் வேண்டும்:

(அ) அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி ஒருவராக ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி;

(ஆ) அத்தகைய அதிகாரவளிப்பில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியைக் கையாள்வதற்குச் சட்டத்தின் 4 (1) (ஈ) என்னும் பிரிவின்கீழ் மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுகின்ற ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கி; அத்துடன்

(இ) அத்தகைய அதிகாரவளிப்பில் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக வெளிநாட்டுச் செலாவணியைக் கையாள்வதற்கு சட்டத்தின் 4 (1) (இ) என்னும் பிரிவின்கீழ் மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கி.

3. இலங்கைக்கு வெளியே வதிவுள்ள நிதிநிறுவனமொன்று இலங்கையில் ஆட்களுக்கு கொடுப்பனவுகளைப் பயனுறுத்தும் நோக்கத்திற்காக இலங்கையில் ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியுடன் வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகள் மற்றும் இலங்கை ரூபாக் கணக்குகளைத் திறக்கலாம் மற்றும் பேணலாம்.

4. அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்று அல்லது 2 ஆம் ஒழுங்குவிதியின் (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப்பட்டவாறான உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியொன்று அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவராக அத்தகைய உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினால் வேறு நாடுகளில் வெளிநாட்டுச் செலாவணிக் கொடுக்கல்வாங்கல்களின் வினைத்திறனான தீர்த்துவைத்தலை வசதிப்படுத்துவதற்கென இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட ஒரு வங்கியிடம் அல்லது இலங்கைக்கு வெளியே தாபிக்கப்பட்ட அத்தகைய வங்கிக் கிளைகளிடம் நொஸ்ரோ கணக்குகளைத் திறக்கலாம் மற்றும் பேணலாம்.

**பாகம் II**

**கணக்குகளின் வகைகள்**

5. (1) பின்வரும் வகையினவான கணக்குகள், அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவராக உரிமமளிக்கப்பட்ட ஏதேனும் வர்த்தக வங்கியினால் அல்லது 2 ஆம் ஒழுங்குவிதியின் (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப்பட்டவாறான ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியினால் திறக்கப்படலாம் மற்றும் பேணப்படலாம்:

(அ) உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கு (உமுக)
(ஆ) வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கு (வெமுக)
(இ) மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கு ( மூகொரூக)
(ஈ) தூதுவ வெளிநாட்டு நாணயக் கணக்கு (தூவெக)
(உ) தூதுவ ரூபாக் கணக்கு (தூரூக)

(2) உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகள், வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்குகள் மற்றும் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்குகள் என்பன நடப்பு (காசோலை வரைகின்ற வசதியின்றி), சேமிப்பு அல்லது காலவைப்புக் கணக்குகளாக இலங்கை ரூபாக்களில் அல்லது பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் திறக்கப்படலாம் மற்றும் பேணப்படலாம்.

(3) தனியாட்களினால் பேணப்படும் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகள், தூதுவ வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் தூதுவ ரூபாக் கணக்குகள் தனியாக அல்லது வேறொரு தகவுடைய ஆளுடன் தனியான அல்லது கூட்டுக்கணக்காக வைத்திருக்கப்படலாம்.

*(4) ஓராம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட கணக்குகள், அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளினால், தமது உள்ளக வங்கித் தொழிற்கூறுகளில் திறக்கப்படுதலும் பேணப்படுதலும் வேண்டும்.*

*6. ஐந்தாம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கணக்கு, இலங்கை ரூபாக்களில் அல்லது இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை* I *இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அல்லது காலத்துக்குக்காலம் மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான ஏதேனும் வேறு நாணயத்தில் திறக்கப்படுதலும் பேணப்படுதலும் வேண்டும்.*

*7. (1) ஆளெவரும், இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை* II *இல் குறித்துரைக்கப்பட்டவாறாக அத்தகைய கணக்கொன்றைத் திறப்பதற்குத் தகவுடையவராக அத்தகைய ஆள் இல்லாதவிடத்து 5 ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட கணக்கொன்றைத் திறத்தலாகாது.*

*(2) அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக ஒவ்வோர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியும் அல்லது 2 ஆம் ஒழுங்குவிதியின் (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப்பட்டவாறான ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியும் 3 ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட கணக்கொன்றைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் நாடுகின்ற ஆட்கள் அட்டவணை* II *இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளைக்கற்களின்கீழ் அத்தகைய கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் தகவுள்ளனரா என ஆய்ந்தறிவதற்கு உரிய விழிப்புக்கவனத்தையும் நியாயமான கவனத்தையும் பிரயோகித்தல் வேண்டும். கணக்கைப் பேணும்போதும் கணக்கொன்றை மூடியபின்னர் ஆறாண்டுகளைக் கொண்டவொரு காலப்பகுதியின்போதும் கணக்கு வைத்திருப்பவரின் தகவுடைமைக்குச் சான்றளித்து அவர் தொடர்பான தகவல்களும் ஆவணமுறையான சான்றும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியாக ஒவ்வோர் உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கியினாலும் அல்லது 2 ஆம் ஒழுங்குவிதியின் (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப்பட்டவாறான ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கியினாலும் பேணப்படுதல் வேண்டும்.*

*(3) மூன்றாம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு வகையினதுமான கணக்கைத் திறப்பதற்கான தகவுடைமைக்கான கட்டளைக்கற்கள், அத்தகைய ஒவ்வொரு வகையினதுமான கணக்குக்கும் அனுமதிக்கப்பட்ட பற்று மற்றும் வரவு வரையறைகள் என்பன இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை* II *இல் குறித்துரைக்கப்பட்டவாறிருத்தல் வேண்டும்.*

*(4) இவ்வொழுங்குவிதிகளில் உள்ளதெதுவும், கணக்குகளைத் திறத்தலும் பேணுதலும் தொடர்பான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதிலிருந்து அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளை அல்லது 2 ஆம் ஒழுங்குவிதியின் (ஆ) மற்றும் (இ) என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப்பட்டவாறான ஏதேனும் உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகளை அல்லது கணக்கு வைத்திருப்பவர்களைத் தடுத்தலாகாது.*

## பாகம் III

## ஏலவேயுள்ள கணக்குகளுக்கு மீளப்பெயர்குறித்தல் முதலியன

*8. அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளாக எல்லா உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளும், 2 ஆம் ஒழுங்குவிதியின் (ஆ) என்னும் பந்தியிற் குறித்துரைக்கப்பட்டவாறான உரிமமளிக்கப்பட்ட விசேடித்த வங்கிகளும் இரண்டாயிரத்திப்பதினெட்டாம் ஆண்டு ஏப்பிறல் 1 ஆந் திகதிக்கு முன்னர்-*

*(அ) நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வெளிநாட்டு நாணயங்களிலும் இலங்கை ரூபாக்களிலும் திறக்கப்பட்டு பேணப்பட்ட ஏலவேயுள்ள எல்லாப் பிணையங்கள் முதலீட்டுக் கணக்குகளையும் (பிமுக) மற்றும் விசேட வெளிநாட்டு முதலீட்டு வைப்புக் கணக்குகளையும் (விவெமுவைக) உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளாக (உமுக) மீளப் பெயர்குறித்தல் வேண்டும்; அத்துடன்*

*(ஆ) ஏலவேயுள்ள எல்லா வதிவற்றோர் ரூபாக் கணக்குகளையும் (வரூக) வதிவற்றோர் முடக்கிய கணக்குகளையும் (வமுக) புலம்பெயர்ந்தோர் முடக்கிய கணக்குகளையும் (புமுக) மூலதன கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்குகளாக (மூகொரூக) மீளப் பெயர்குறித்தல் வேண்டும்.*

*9. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக-*

*"சட்டம்" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம் என்று பொருளாகும்;*

*"அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;*

"மத்திய வங்கி" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"நிதி நிறுவனம்" என்பது, நிதித்தொழிலை நடாத்துவதற்கு 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க, நிதித்தொழில் சட்டத்தின்கீழ் உரிமமளிக்கப்பட்ட கம்பெனி என்று பொருளாகும்;

"ஆள்" என்பது, (2 ஆம் அத்தியாயமான) பொருள்கோடல் சட்டத்தில் உள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"அனுப்புதொகைகள்" என்பது, தந்திக் கைமாற்றல்கள், வங்கிகளிடையேயான வேறு கைமாற்றல்கள், வங்கி வரைவுகள், வேறு கொடுப்பனவுச் சாதனங்கள், சர்வதேசரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு கொடுப்பனவு உத்திகள் அல்லது அமைப்புமுறைகளினூடாகப் பெறப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் நாணயத்தாள்கள் தவிர, வெளிநாட்டிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் பரிவர்த்தனைக் கம்பெனிகளிலிருந்து/அகங்களிலிருந்து பெறப்பட்ட நிதிகளை உள்ளடக்குதல் வேண்டும்;

"நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம்" என்பது, (423 ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் என்று பொருளாகும்.

## அட்டவணை I

**(ஒழுங்குவிதி 6)**

**பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள்**

(1) ஐக்கிய அமெரிக்க நாடுகள் டொலர்
(2) யூரோ
(3) ஸ்டேர்லிங் பவுண்
(4) அவுஸ்திரேலிய டொலர்
(5) சிங்கப்பூர் டொலர்
(6) சுவீடன் குரோனர்
(7) சுவிஸ் பிரான்க்
(8) கனேடிய டொலர்
(9) ஹொங்கொங் டொலர்
(10) யப்பானிய யென்
(11) டென்மார்க் குரோனர்
(12) நோர்வே குரோனர்
(13) சீன ரென்மின்பி
(14) நியூசீலாந்து டொலர்.

## அட்டவணை II

**(ஒழுங்குவிதி 7)**

**தகவுடைமையும் கணக்குகளின் அனுமதிக்கப்பட்ட பற்று மற்றும் வரவு வரையறைகளும்**

1. உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகள் (உமுக)

(1) உமுகணக்கொன்றைத் திறப்பதற்குத் தகவுடைய ஆட்கள்

(அ) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே வதிகின்ற நாட்டினத்தவர் அல்லாத ஒருவர்.
(ஆ) இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட நாட்டினத்தவர் அல்லாத ஒருவர்.
(இ) இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கைப் பிரசையொருவர்.

(ஈ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பெனியொன்று.

(உ) இலங்கைக்கு வெளியே தாபிக்கப்படுகின்ற நாட்டு மற்றும் பிராந்திய நிதியங்களும் பரஸ்பர நிதியங்களும் கூறு நம்பிக்கைப்பொறுப்புக்களும் மற்றும் வேறு நிறுவனஞ்சார் முதலீட்டாளர்களும்.

(ஊ) ஓர் இறந்த ஆளினது மரணச்சொத்தினது நிருவாகம் பூர்த்திசெய்யப்படும்வரை அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியிடம் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றைப் பேணி வந்த அத்தகைய இறந்த ஆளின் நிருவாகி அல்லது நிறைவேற்றுநரொருவர்.

(எ) வழக்கு நடவடிக்கைகள் முடிவுறும்வரை அந்த அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியிடம் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றைப் பேணிய கம்பெனியொன்றின் பெறுநர் அல்லது ஒழிப்போன் ஒருவர்.

(ஏ) காலத்திற்குக்காலம் மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்படக்கூடிய வேறெவரேனும் ஆள் அல்லது வகுதியினரான ஆட்கள்.

(2) அனுமதிக்கப்பட்ட வரவுகள்

(அ) வங்கித்தொழில் முறைமையின் ஊடாக கணக்கு வைத்திருப்பவரின் சார்பில் இலங்கைக்கு வெளியேயிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலான அனுப்புதொகைகள்.

(ஆ) அதே கணக்கு வைத்திருப்பவரின் அல்லது வேறெவரேனும் ஆளின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள், உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகள் அல்லது கரைகடந்த வங்கித் தொழிற்கூறில் பேணப்பட்ட கணக்குகள் என்பவற்றிலிருந்தான கைமாற்றல்கள்.

(இ) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அனுமதிக்கப்பட்டவாறாக இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்களினால் இலங்கையில் பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்களிலிருந்து பெறப்பட்ட பங்கிலாபங்கள், விற்பனை அல்லது முதிர்ச்சி வரும்படிகள், ஒழித்துக்கட்டுதலின் கையுதிர்ப்பு, மூலதன மீட்பு, பங்கு மீள் வாங்குகை, இலாபங்கள், மேன்மிகை நிதிகள், வாடகை வருமானம், முதலை அறவிடுதல், வட்டி அல்லது வேறு தொடர்புபட்ட வருமானம்.

(ஈ) வெளிப்படுத்துகையின்மேல் கணக்கு வைத்திருப்பவரினால் இலங்கைக்குள் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு நாணயம் (அதாவது அத்தகைய வெளிநாட்டு நாணயத் தாள்கள் 15,000 ஐஅநா டொலர்களை விஞ்சுகின்றவிடத்து அல்லது வேறேதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமானதை விஞ்சுகின்றவிடத்து சுங்கத் திணைக்களத்துக்கான வெளிப்படுத்துகையின்மீது அல்லது அத்தகைய வெளிநாட்டு நாணயத்தாள்கள் 15,000 ஐஅநா டொலர்கள் அல்லது வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமானதற்குக் குறைவாக உள்ளவிடத்து அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கான தோதான வெளிப்படுத்துகையொன்றின்மீது.

(உ) அத்தகைய மூல முதலீடு உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கினூடாகச் செய்யப்பட்டுள்ளவிடத்து (அல்லது கணக்கு வைத்திருப்பவரின் மீளப்பெயர் குறிக்கப்பட்ட பிணையங்கள் முதலீட்டுக் கணக்கின் ஊடாக அல்லது இவ்வொழுங்குவிதிகள் வலுவுக்கு வருவதற்கு முன்னர் உட்திரும்பல் அனுப்புதல்களின் எண்பிப்பை நிச்சயிப்பதன்மேல்) இலங்கை ரூபாவில் பெறப்பட்ட மூலதன ஈட்டுகைகள், குத்தகைப்பற்று உரிமைகள், துணைக் குத்தகைப் பற்று உரிமைகள் எவையேனுமிருப்பின் அவையுட்பட அசைவற்ற ஆதனங்களின் விற்பனை வரும்படிகள்.

(ஊ) நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அல்லது 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அளிக்கப்பட்ட பொதுவான அல்லது விசேடமான அங்கீகாரம் ஒன்றின்கீழ் கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து (வெளிநாட்டுக் கடன்தருநர்) அத்தகைய ஆளினால் (கடன்பெறுநர்) பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களின் மீள்கொடுப்பனவாக இலங்கையில் வதிவுள்ள ஒருவரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்தான கைமாற்றுதல்கள்.

(எ) நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அல்லது 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்ட பொதுவான அல்லது விசேடமான அங்கீகாரத்தின்கீழ் கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து (வெளிநாட்டுக் கடன்தருநர்) பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களின் மீள்கொடுப்பனவுக்கென இலங்கையில் வதிவுள்ள ஒருவரினால் (கடன்பெறுநர்) வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றப்பட்ட இலங்கை ரூபாக்கள்.

(ஏ) அதே கணக்கு வைத்திருப்பவரின் தூதுவ வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் தூதுவ ரூபாக் கணக்குகளிலிருந்தான கைமாற்றுதல்கள்.

(ஐ) அனுமதிக்கப்பட்ட முதலீடுகளின் அத்தகைய முதலீடு அதே உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கின் ஊடாகக் கணக்குவைத்திருப்பவரினால் செய்யப்பட்டுள்ளவிடத்து (வழங்குநரினால் கூட்டிணைப்புச் செயற்பாடொன்றின் பயனால் முதலீட்டாளர் ஒருவரை வந்தடைகின்ற எவையேனும் அடுத்துவரும் பங்குகள், உரிமையொன்றின், உரித்துடைமையொன்றின் அல்லது மாற்றமொன்றின் பிரயோகம் உட்பட) கணக்கு வைத்திருப்பவரினால் அத்தகைய வாங்குநருக்கு அனுமதிக்கப்பட்ட முதலீடுகளின் விற்பனை தொடர்பில் வேறோர் ஆளின் (அதாவது வாங்குநர்) உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றிலிருந்தான கைமாற்றுதல்கள்.

(ஒ) மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளினால் அனுமதிக்கப்பட்டவாறாக அதே கணக்கு வைத்திருப்பவரின் மூலதனக் கொடுக்கல்வாங்கல் ரூபாக் கணக்கிலிருந்தான கைமாற்றுதல்கள்.

(ஓ) காலத்துக்குக்காலம் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகளிலிருந்தான கொடுக்கல் வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள்.

(ஔ) கணக்கில் வைத்திருக்கப்படும் நிதிகளின்மீது உழைக்கப்பட்ட வட்டிகள்.

(3) அனுமதிக்கப்பட்ட பற்றுகள்

(அ) இலங்கை ரூபாக்களில் இலங்கையிலான செலுத்தீடுகள்.

(ஆ) கணக்கு வைத்திருப்பவர் சார்பில் வெளித்திரும்பல் அனுப்புதொகைகள்.

(இ) அதே கணக்கு வைத்திருப்பவரின் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகள், தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது கரைகடந்த வங்கித்தொழில் கூறில் பேணப்படும் கணக்குகளுக்கான கைமாற்றுதல்கள்.

(ஈ) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்ட அனுமதியின் நியதிகளின்படி இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆட்களினால் இலங்கையில் பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான கொடுப்பனவுகள்.

(உ) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்ட பொதுவான அல்லது விசேடமான அங்கீகாரத்தின் நியதிகளின்படி வெளிநாட்டு நாணயக் கடன்கள் பெறப்பட்டுள்ளவிடத்து, இலங்கையில் வதிகின்ற ஆட்களுக்கு அத்தகைய கடன்கள் தொடர்பான செலுத்தீடுகள்.

(ஊ) அத்தகைய கடன்கள் 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அனுமதிக்கப்பட்ட கடல்கடந்த மூலதனக் கொடுக்கல்வாங்கலுக்கு நிதியளிக்கும் நோக்கத்துக்காகப் பெறப்பட்டுள்ளவிடத்து, (அதாவது, வெளித்திரும்பல் முதலீடொன்று) கடன்பெறுநரின் வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்குக்கு வெளிநாட்டு நாணயக் கடன்களின் வரும்படிகளைக் கைமாற்றுதல் (தனிசுப் பிணையங்களுட்பட).

(எ) அதே கணக்குவைத்திருப்பவரின் தூதுவ வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கும் தூதுவ ரூபாக் கணக்குகளுக்குமான கைமாற்றல்கள்.

(ஏ) கணக்கு வைத்திருப்பவரினால் அத்தகைய விற்பனையாளரிடமிருந்து ஏதேனும் அனுமதிக்கப்பட்ட முதலீட்டின் கொள்வனவு தொடர்பில் வேறோராளின் (அதாவது, விற்பனையாளர்) உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குக்கான கைமாற்றல்கள்.

(ஐ) காலத்துக்குக்காலம் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகளிலிருந்தான கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள்.

*2. வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்குகள் (வெமுக)*

*(1) வெமுகணக்குகள் திறப்பதற்குத் தகவுடைய ஆட்கள்*

*(அ) உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட கம்பெனியொன்று தவிர 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கம்பெனிகள்.*

*(ஆ) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட பங்காண்மை ஒன்று.*

*(இ) இலங்கையில் வதிவுள்ள தனியாளொருவர்.*

*(2) அரசசார்பற்ற ஒழுங்கமைப்பொன்று வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அனுமதிக்கப்படுதலாகாது.*

*(3) எவ்வாளுக்கெதிராக அல்லது எக்கம்பெனிக்கெதிராக அல்லது எப்பங்காண்மைக்கெதிராகச் சட்ட வழக்கு நடவடிக்கைகள் அல்லது புலனாய்வுகள், நீக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அல்லது 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் குற்றவழக்குத் தொடர்பில் முடிவுறாதுள்ளனவோ அவ்வெவரேனுமாள் அல்லது கம்பெனி அல்லது பங்காண்மை மத்திய வங்கியிடமிருந்து அத்தகைய அனுப்புதொகைக்கென அனுமதியைப் பெறாமல் அனுமதிக்கத்தகு மூலதனக் கொடுக்கல்வாங்கல் தொடர்பில் ஏதேனும் வெளித்திரும்பல் அனுப்புதொகையை அனுப்புவதற்கு அனுமதிக்கப்படலாகாது.*

*(4) அனுமதிக்கப்பட்ட வரவுகள்*

*(அ) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் நியதிகளின்படி அத்தகைய வரையறைகள் குறித்துரைக்கப்பட்ட அளவிற்கு, முதலீட்டுத் தேவைப்பாடுவரை, வெளிநாட்டு நாணயத்திற்கு மாற்றப்பட்ட தகவுடைய வதிவுள்ள முதலீட்டாளர்களின் இலங்கை ரூபா வரும்படிகள்.*

*(ஆ) கணக்கு வைத்திருப்பவரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்தான கைமாற்றுதல்கள்.*

*(இ) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் நியதிகளின்படி அனுமதிக்கப்பட்ட கடல்கடந்த மூலதனக் கொடுக்கல்வாங்கலுக்கு நிதியளிப்பதற்கென, (அதாவது, வெளித்திரும்பல் முதலீடு) கடன்தருநரின் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கு ஒன்றினூடாக வெளிநாட்டு மூலமொன்றிலிருந்து பெறப்பட்ட கடனொன்றின் (தனிசுப் பிணையங்களின் வழங்குகை உட்பட) வரும்படிகள்.*

*(ஈ) அத்தகைய மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் அதே வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கின் ஊடாகச் செய்யப்பட்டுள்ளவிடத்து, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் அல்லது நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அனுமதிக்கப்பட்டவாறாக இலங்கையில் வதிவுள்ள ஆட்களினால் இலங்கைக்கு வெளியே பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் பெறப்பட்ட பங்கிலாபங்கள், பங்குகளின் விற்பனை வரும்படிகள் முதிர்ச்சி மூலதன ஈட்டுகைகள் மற்றும் ஒழித்துக்கட்டுகை வரும்படிகள், பெறப்படத்தக்க மூலதனக் குறைப்புக்கள், இறைமை முறிகள், கூறுகள், தனிசுப் பிணையங்கள், இலாபங்கள், விளிம்புகள் மற்றும் மேன்மிகை நிதிகள் முகாமைத்துவக் கட்டணங்கள், ஆலோசனைக் கட்டணங்கள் மற்றும் தரகுகள் அல்லது வேறெவையேனும் தொடர்புபட்ட பெறுகைகள் முதலியனவான அனுப்பு தொகைகள் (வழங்குநரினாலான கூட்டிணைப்பு நடவடிக்கையொன்றின் பயனால், உரிமையொன்றின், உரித்துடைமையொன்றின் அல்லது மாற்றத்தின் பிரயோகத்தினால் முதலீட்டாளரை வந்தடைந்த எவையேனும் அடுத்துப்பின்னரான பங்குகள் உட்பட).*

*(உ) காலத்திற்குக்காலம் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகளிலிருந்தான கொடுக்கல் வாங்கல்கள் அல்லது கைமாற்றங்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் அல்லது கைமாற்றுதல்கள்.*

*(ஊ) கணக்கில் வைத்திருக்கப்பட்ட நிதிகள்மீது உழைக்கப்பட்ட வட்டி.*

(5) அனுமதிக்கப்பட்ட பற்றுகள்

(அ) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வழங்கப்பட்ட அனுமதிகளின் நியதிகளின்படி கணக்கு வைத்திருப்பவரினால் பொறுப்பேற்கப்பட்ட மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் (அதாவது வெளித்திரும்பல் முதலீடுகள்) தொடர்பிலான கொடுப்பனவுகள் (தாபித்தல், பேணுதல் மற்றும் செலவு, வங்கி விதிப்பனவுகள், தரகுக் கட்டணங்கள், தரகுகள் அல்லது வேறு ஏதேனும் தொடர்புபட்ட கொடுப்பனவு முதலியன உட்பட).

(ஆ) கணக்கு வைத்திருப்பவரின் நடப்புக் கொடுக்கல்வாங்கல்களுக்காக இலங்கைக்கு வெளியே வெளிநாட்டு நாணயத்திலான கொடுப்பனவுகள்.

(இ) மூல முதலீடானது, அத்தகைய தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளை அல்லது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளைப் பற்றுவைப்பதன்மூலம் செய்யப்பட்டுள்ளவிடத்து, வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்குக்குள் கடல்கடந்த மூலதனக் கொடுக்கல்வாங்கலொன்றிலிருந்து பெறப்பட்ட மூலதனமாக மற்றும் மூலதன ஈட்டுகைகளாக (அதாவது வெளித்திரும்பல் முதலீடு) கணக்கு வைத்திருப்பவரின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் மற்றும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கான கைமாற்றுதல்கள்.

(ஈ) காலத்துக்குக்காலம் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகளிலிருந்தான கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள்.

(உ) இலங்கை ரூபாக்களிலான மீளப்பெறுதல்கள்.

**3. மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்குகள் (மூகொரூக)**

(1) மூகொரூகணக்குகளைத் திறப்பதற்குத் தகவுடைய ஆட்கள்

(அ) இலங்கைக்கு வெளியே நிரந்தரமாக வதிகின்ற, தனியாளான இலங்கையர்.

(ஆ) இலங்கைக்கு வெளியே வதிபவராகவுள்ள, இலங்கையைப் பிறப்பிடமாகக்கொண்ட நாட்டினத்தவர் அல்லாதவர்.

(இ) இலங்கைக்கு வெளியே வதிகின்ற நாட்டினத்தவர் அல்லாதவர்.

(ஈ) இலங்கையரான இரட்டைப் பிரசாவுரிமைகொண்ட பிரசை.

(உ) இலங்கைக்கு வெளியே பதிவுசெய்யப்பட்ட வெளிநாட்டுக் குழுமங்களும் கம்பெனிகளும்.

(ஊ) இலங்கைக்கு வெளியே வதிகின்ற, இலங்கை நாட்டினத்தவரொருவர்.

(2) அனுமதிக்கப்பட்ட வரவுகள்

(அ) வங்கித்தொழில் முறைமையினூடாகக் கணக்குவைத்திருப்பவரின் சார்பில் இலங்கைக்கு வெளியேயிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலான அனுப்புதொகைகள்.

(ஆ) கணக்கு வைத்திருப்பவர் இலங்கையின் தனியாளான குடியகல்பவராக, இலங்கைக்கு வெளியே வதிகின்ற நாட்டினத்தவர் அல்லாதவராக அல்லது இரட்டைப் பிரசாவுரிமைகொண்ட இலங்கைப் பிரசையாக இருக்குமிடத்து, இலங்கையில் பெறப்படுகின்ற, அசைவுள்ள, அசைவற்ற ஆதனத்தினதும் அருவ/உருவச் சொத்துக்களினதும் விற்பனை வரும்படிகள் உட்பட்ட உள்ளூர் வருமானம்.

(இ) காலத்துக்குக்காலம் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகளிலிருந்தான கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள்.

(ஈ) கணக்கில் வைத்திருக்கப்பட்ட நிதிகளின்மீது இலங்கை ரூபாக்களில் உழைக்கப்பட்ட வட்டி.

(3) அனுமதிக்கப்பட்ட பற்றுகள்

(அ) மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின்படி, இலங்கையரான குடியகல்பவர் தொடர்பில் தனியாளொருவருக்கு 200,000 ஐஅநா டொலர்வரை குடியகல்தற் படியின் அனுப்புதொகை.

(ஆ) மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின்படி, 4 ஆம் பந்தியின் 3 (அ) என்னும் உப்பந்திக்கு மேலதிகமாக, தகவுடைய இலங்கையரான குடியகல்பவர் தொடர்பில் 30,000 ஐஅநா டொலரான படியொன்றின் அனுப்புதொகை.

(இ) மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின்படி, வெளிநாட்டினத்தவர்கள் தொடர்பில் மூலதனக் கொடுக்கல்வாங்கல்களுக்காக ஆண்டொன்றுக்கு 30,000 ஐஅநா டொலரின் அனுப்புதொகை.

(ஈ) கணக்கு வைத்திருப்பவர் இலங்கையின் தனியாளான குடியகல்பவராக, இலங்கைக்கு வெளியேயான நாட்டினத்தவர் அல்லாதவரான வதிபவராக அல்லது இரட்டைப் பிரசாவுரிமைகொண்ட இலங்கைப் பிரசையாக இருக்குமிடத்து, மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின்படி, தகவுடைய புலம்பெயர் படியைக் கணக்கு வைத்திருப்பவரின் ஒரு தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குக்கு அல்லது ஓர் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குக்குக் கைமாற்றுதல்.

(உ) இலங்கை ரூபாக்களில் இலங்கையிலான செலுத்தீடுகள்.

(ஊ) காலத்துக்குக்காலம் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகளிலிருந்தான கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள்.

**4. தூதுவ வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (தூவெக)**

(1) தூவெகணக்குகளைத் திறப்பதற்குத் தகவுடைய ஆட்கள்

(அ) வெளிநாட்டலுவல்கள் என்ற விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சினால் வழங்கப்பட்ட தூதுவக் கடவுச்சீட்டை, தூதுவ அடையாள அட்டையை வைத்திருப்பவரும், குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வதிவு விசாவைக் பெறுகின்ற தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளவருமான வெளிநாட்டுப் பிரசையொருவர்.

(ஆ) தூதுவர்சாராக் கடவுச்சீட்டை வைத்திருப்பவரும், குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வதிவு விசாவைப் பெறுகின்ற தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளவருமான வெளிநாட்டுப் பிரசையொருவர்.

(2) அனுமதிக்கப்பட்ட வரவுகள்

(அ) வங்கித்தொழில் முறைமையினூடாகக் கணக்குவைத்திருப்பவரின் சார்பில் இலங்கைக்கு வெளியேயிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலான அனுப்புதொகைகள்.

(ஆ) சுங்கத் திணைக்களத்துக்கான வெளிப்படுத்துகையின்மீது கணக்குவைத்திருப்பவரினால் இலங்கையினுட் கொணரப்பட்ட வெளிநாட்டு நாணயம்.

(இ) அதே கணக்கு வைத்திருப்பவரின் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளிலிருந்தும் கரைகடந்த வங்கித்தொழிற் கூறிலிருந்தும் பேணப்பட்ட கணக்குகளிலிருந்தான கைமாற்றல்கள்.

(ஈ) கணக்குவைத்திருப்பவரைப் பொருட்படுத்தாது, தூதுவ வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்தும் தூதுவ ரூபாக் கணக்குகளிலிருந்துமான கைமாற்றல்கள்.

(உ) காலத்துக்குக்காலம் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகளிலிருந்தான கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள்.

(ஊ) கணக்கில் வைத்திருக்கப்பட்ட நிதிகளின்மீது வெளிநாட்டு நாணயத்தில் உழைக்கப்பட்ட வட்டி.

(3) அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்

(அ) இலங்கைக்கு வெளியே செய்யப்பட்ட எவையேனும் வெளித்திரும்பல் அனுப்புதொகைகள்.

(ஆ) கணக்கு வைத்திருப்பவரின் உள்ளூர் செலவுகளுக்காக வெளிநாட்டு நாணயத்திலான அல்லது இலங்கை ரூபாக்களிலான மீளப்பெறுதல்.

(இ) அதே கணக்குவைத்திருப்பவரின் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளுக்கும் கரைகடந்த வங்கித்தொழிற் கூறில் பேணப்பட்ட கணக்குகளுக்குமான கைமாற்றல்கள்.

(ஈ) கணக்கு வைத்திருப்பவரைப் பொருட்படுத்தாது, தூதுவ வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கும் தூதுவ ரூபாக் கணக்குகளுக்குமான கைமாற்றல்கள்.

(உ) வேறெவரேனுமாளின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குக்கான கைமாற்றல்கள்.

(ஊ) காலத்துக்குக்காலம் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகளிலிருந்தான கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள்.

5. **தூதுவ ரூபாக் கணக்குகள் (தூரூக)**

(1) தூரூகணக்குகளைத் திறப்பதற்குத் தகவுடைய ஆட்கள்

(அ) வெளிநாட்டலுவல்கள் என்ற விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சினால் வழங்கப்பட்ட தூதுவக் கடவுச்சீட்டை, தூதுவ அடையாள அட்டையை வைத்திருப்பவரும், குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட வதிவு விசாவைப் பெறுகின்ற தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளவருமான வெளிநாட்டுப் பிரசையொருவர்.

(ஆ) தூதுவர்சாரா கடவுச்சீட்டை வைத்திருப்பவரும், குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட வதிவு விசாவைப் பெறுகின்ற தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளவருமான வெளிநாட்டுப் பிரசையொருவர்.

(2) அனுமதிக்கப்பட்ட வரவுகள்

(அ) வங்கித்தொழில் முறைமையினூடாகக் கணக்குவைத்திருப்பவரின் சார்பில் இலங்கைக்கு வெளியேயிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலான அனுப்புதொகைகள்.

(ஆ) இலங்கையிலுள்ள எவரேனுமாளிடமிருந்து கணக்குவைத்திருப்பவருக்கு வருமதியான மீளளிப்புகள், மீளச்செலுத்துகைகள் மற்றும் கொடுப்பனவுகள்.

(இ) கணக்கு வைத்திருப்பவரினால் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டதன்மேல் இலங்கையில் பெறப்பட்ட, கணக்கு வைத்திருப்பவரினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட மோட்டார் வாகனங்களின் விற்பனை வரும்படிகள்.

(ஈ) அதே கணக்கு வைத்திருப்பவரின் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளிலிருந்தான கைமாற்றல்கள்.

(உ) கணக்குவைத்திருப்பவரைப் பொருட்படுத்தாது, தூதுவ வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்தும் தூதுவ ரூபாக் கணக்குகளிலிருந்துமான கைமாற்றல்கள்.

(ஊ) காலத்துக்குக்காலம் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகளிலிருந்தான கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள்.

(எ) கணக்கில் வைத்திருக்கப்பட்ட நிதிகளின்மீது வெளிநாட்டு நாணயத்தில் உழைக்கப்பட்ட வட்டி.

(3) அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்

(அ) இலங்கை ரூபாக்களில் இலங்கையிலான செலுத்தீடுகள்.

(ஆ) விசாக் கட்டணங்கள், மீளளிப்புகள், மீளச்செலுத்துகைகள் மற்றும் கணக்கு வைத்திருப்பவரினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட மோட்டார் வாகனங்களின் விற்பனை வரும்படிகள்.

(இ) அதே கணக்குவைத்திருப்பவரின் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குகளுக்கான கைமாற்றல்கள்.

(ஈ) கணக்கு வைத்திருப்பவரைப் பொருட்படுத்தாது, தூதுவ வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கும் தூதுவ ரூபாக் கணக்குகளுக்குமான கைமாற்றல்கள்.

(உ) இயைபான துறை அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட வேறேதேனும் கொடுக்கல்வாங்கல்.

(ஊ) காலத்துக்குக்காலம் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகளிலிருந்தான கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள்.

6. **இவ்வட்டணையின் நோக்கத்துக்காக-**

"இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு" என்பது, 1987 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு என்று பொருளாகும்.

ச.வ.பி. 10/2017

**2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 5 ஆம், 8 ஆம் பிரிவுகளுடன் சேர்த்துவாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

ரணில் விக்ரமசிங்க,
தேசியக் கொள்கைகள் மற்றும்
பொருளாதார அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2017, நவெம்பர் 17.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2017 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணி (வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளைத் திறத்தலும் பேணுதலும்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் சட்டம் நடைமுறைக்கு வரும் திகதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

**பாகம் I**

**கணக்குகளைத் திறப்பதற்கான அதிகாரம்**

2. அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி ஒருவர், அவரது அனுமதிப்பத்திரத்தில் குறித்துரைக்கப்பட்ட அளவுக்கு, எவரேனுமாளின் பெயரில் வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அதிகாரமுடையவராதல் வேண்டும்.

## பாகம் II

### கணக்குகளின் வகைகள்

*3. (1) இரண்டாம் ஒழுங்குவிதியின்கீழ் ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியினால் அல்லது ஒரு மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியினால் பின்வரும் வகையினவான கணக்குகள் திறக்கப்பட்டு பேணப்படலாம்:*

*(அ) தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (தவெநாக);*

*(ஆ) வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (விவெநாக); அல்லது*

*(இ) மத்திய வங்கியினால் காலத்துக்குக்காலம் வழங்கப்பட்ட பணிப்புகளின் நியதிகளின்படி பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகள்.*

*(2) அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளாக உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளின் விடயத்தில், (1) ஆம் பந்தியிற் குறித்துரைக்கப்பட்ட கணக்குகள், அவற்றின் உள்ளக வங்கித்தொழிற் கூறுகளில் திறக்கப்படுதலும் பேணப்படுதலும் வேண்டும்.*

*4. மூன்றாம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் கணக்கு, இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை* **I** *இல் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் பெயர் குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் அல்லது காலத்துக்குக்காலம் மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான வேறேதேனும் நாணயத்தில் திறக்கப்படுதலும் பேணப்படுதலும் வேண்டும்.*

*5. (1) ஆளெவரும், ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டவாறாக 3 ஆம் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்ட கணக்கொன்றைத் திறப்பதற்குத் தகவுடையவராகவிராதவிடத்து அத்தகையவொரு கணக்கை அத்தகைய ஆள் திறத்தலாகாது.*

*(2) ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியும் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியும், 3 ஆம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட கணக்கொன்றைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் நாடுகின்ற ஆட்கள் அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட கட்டளைக்கற்களின்கீழ் அத்தகைய கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் தகவுடையவர்களாகவுள்ளனர் என்பதனை நிச்சயிப்பதற்கு உரிய விழிப்புக்கவனத்தையும் நியாயமான கவனத்தையும் பிரயோகித்தல் வேண்டும். கணக்கு வைத்திருப்பவர் கணக்கைப் பேணும்போதும் கணக்கொன்றை மூடியபின்னர் ஆறாண்டுக் காலப்பகுதியின்போதும் அவரது தகவுடைமையைச் சான்றுப்படுத்துகின்ற அவர் தொடர்பான தகவல்களும் ஆவணமுறையான சான்றும் ஒவ்வோர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியினாலும் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியினாலும் பேணப்படுதல் வேண்டும்.*

*(3) மூன்றாம் ஒழுங்குவிதியிற் குறித்துரைக்கப்பட்ட ஒவ்வொரு வகையினதுமான கணக்கைத் திறப்பதற்கான தகவுடைமைக்கான மற்றும் அத்தகைய ஒவ்வொரு வகையினதுமான கணக்குக்கும் அனுமதிக்கப்பட்ட பற்று மற்றும் வரவு எல்லைகளுக்கான கட்டளைக்கற்கள் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்டவாறாகவிருத்தல் வேண்டும்.*

*(4) இவ்வொழுங்குவிதிகளில் உள்ளதெதுவும், கணக்குகளைத் திறத்தலும் பேணுதலும் தொடர்பாக வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகுவதிலிருந்து அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளை, மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிகளை அல்லது கணக்கு வைத்திருப்பவர்களைத் தடுத்தலாகாது.*

## பாகம் III

### ஏலவேயுள்ள கணக்குகளுக்கு மீளப்பெயர்குறித்தல் முதலியன

*6. (1) எல்லா அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளும் மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிகளும், இரண்டாயிரத்துப் பதினெட்டாமாண்டு ஏப்பிறல் 1 ஆந் திகதிக்கு முன்னர் பின்வருவனவற்றை, அதாவது:-*

*(அ) (423 ஆம் அத்தியாயமான) நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் திறக்கப்பட்டு பேணப்பட்ட ஏலவேயுள்ள எல்லா வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளையும் (வவெநாக), வதிவுள்ளோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளையும் (வவெநாக), வதிவுள்ள நாட்டினத்தவர் அல்லாதோரின் வெளிநாட்டு நாணயக் கணக்குகளையும் (வநாஅவெநாக) தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளாக (தவெநாக) மீளப்பெயர்குறித்தல் வேண்டும்;*

(ஆ) ஏலவேயுள்ள எல்லா வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகளையும் (வெசெஉக), உட்திரும்பல் அனுப்புதொகைப் பகிர்வுக் கணக்குகளையும் (உஅபக), வெளிநாட்டுக் கப்பற்றொழில் அல்லது வானூர்திக் கம்பெனிகளின் முகவர்களுக்கான வெளிநாட்டு நாணயக் கணக்குகளையும் (வெகவாமுவெநாக) வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளாக (விவெநாக) மீளப்பெயர்குறித்தல் வேண்டும்.

(2) ஏலவேயுள்ள எல்லா வதிவுள்ள அதிதி வெளிநாட்டு நாணயக் கணக்குகளும் மற்றும் சிரேட்ட வெளிநாட்டினத்தவர்கள் விசேட கணக்குகளும் மீளப்பெயர்குறிக்கப்படாமல் இரண்டாயிரத்துப் பதினெட்டாமாண்டு சனவரி 1 ஆந்தேதியிலிருந்து தொழிற்பாட்டில் தொடர்ந்திருத்தல் வேண்டும்.

(3) தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (தவெநாக) மற்றும் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (விவெநாக) பெயர்குறிக்கப்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் நடப்பு (காசோலை வரையும் வசதியின்றி), சேமிப்பு அல்லது காலவைப்புக் கணக்குகளாகத் திறக்கப்பட்டு பேணப்படலாம். அத்தகைய கணக்குகளிலிருந்து தனியாட்களினால் பேணப்பட்ட தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வேறொரு தகவுடைய ஆளுடன் தனியான அல்லது கூட்டுக் கணக்குகளாக வைத்திருக்கப்படலாம்.

7. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்துக்காக–

"அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"மத்திய வங்கி" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"உரிமமளிக்கப்பட்ட வர்த்தக வங்கி" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"ஆள்" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

"அனுப்புதொகைகள்" என்பது, தந்திக் கைமாற்றல்கள், வங்கிகளிடையேயான வேறு கைமாற்றல்கள், வங்கி வரைவுகள், வேறு கொடுப்பனவுச் சாதனங்கள், சர்வதேசரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேறு கொடுப்பனவு உத்திகள் அல்லது அமைப்புமுறைகளினூடாகப் பெறப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் நாணயத்தாள்கள் தவிர, வெளிநாட்டிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் பரிவர்த்தனைக் கம்பெனிகளிலிருந்து/அகங்களிலிருந்து பெறப்பட்ட நிதிகளை உள்ளடக்குதல் வேண்டும்;

"மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## அட்டவணை I

### (ஒழுங்குவிதி 4)

### பெயர்குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள்

(அ) ஐக்கிய அமெரிக்க நாடுகள் டொலர் (ஐஅநாடொ)
(ஆ) யூரோ
(இ) ஸ்டேர்லிங் பவுண்
(ஈ) அவுஸ்திரேலிய டொலர்
(உ) சிங்கப்பூர் டொலர்
(ஊ) சுவீடன் குரோனர்
(எ) சுவிஸ் பிரான்க்
(ஏ) கனேடிய டொலர்
(ஐ) ஹொங்கொங் டொலர்
(ஒ) யப்பானிய யென்
(ஓ) டென்மார்க் குரோனர்
(ஔ) நோர்வே குரோனர்
(க) சீன ரென்மின்பி
(ங) நியூசீலாந்து டொலர்.

## அட்டவணை II

### (ஒழுங்குவிதி 5)

### தகவுடைமையும் கணக்குகளின் அனுமதிக்கப்பட்ட பற்று மற்றும் வரவு வரையறைகளும்

*1.* **தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (தவெநாக)**

*(1) தவெநாகணக்குகளைத் திறப்பதற்குத் தகவுடைய ஆட்கள்*

*(அ)* இலங்கை நாட்டினத்தவராகவுள்ள பராயமடையாதவர் உட்பட்ட தனியாளொருவர்.

*(ஆ)* இலங்கைக்கு வெளியே வதிகின்ற பராயமடையாதவர் உட்பட இலங்கையைப் பிறப்பிடமாகக்கொண்ட தனியாளொருவர்.

(இ) இலங்கையில் வதிகின்ற நாட்டினத்தவரல்லாத வதிவுள்ளவரொருவர்.

(ஈ) ஒன்றில் இலங்கைக்குத் தற்காலிகமாக வருகைதருகின்ற அல்லது இலங்கைக்கு வருகைதருவதற்கு உட்கருதுகின்ற நாட்டினத்தவர் அல்லாதவரொருவர்.

(உ) அந்த அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியிடம் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியிடம் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றைப் பேணிவந்த ஓர் இறந்துள்ள ஆளின் பெயரில், இறந்துள்ள ஆளின் மரணச்சொத்தினது நிருவாகம் பூர்த்திசெய்யப்படும்வரை அத்தகைய இறந்துள்ள ஆளின் நிருவாகி அல்லது நிறைவேற்றுநர்.

*(2) அனுமதிக்கப்பட்ட வரவுகள்*

(அ) வங்கித்தொழில் முறைமையினூடாகக் கணக்கு வைத்திருப்பவரின் சார்பில் இலங்கைக்கு வெளியிலிருந்து பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணியிலான அனுப்புதொகைகள்.

(ஆ) மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின்மூலம் அனுமதிக்கப்பட்டவாறு பயண நோக்கத்துக்காகத் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கைப் பற்றுவைப்பதன்மூலம் கணக்கு வைத்திருப்பவரினால் பெறப்பட்ட பயன்படுத்தப்படாத வெளிநாட்டு நாணயம்.

(இ) கணக்குவைத்திருப்பவரினால் வெளிப்படுத்துகையின் மேல் இலங்கையினுட் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி [அதாவது, அத்தகைய வெளிநாட்டு நாணயத்தாள்கள் 15,000 ஐஅநா டொலரை அல்லது வேறு வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமானதை விஞ்சுமிடத்து அல்லது அதற்குச் சமமாகவிருக்குமிடத்து சுங்கத் திணைக்களத்துக்கான வெளிப்படுத்துகை ஒன்றின்மீது அல்லது அத்தகைய வெளிநாட்டு நாணயத்தாள்கள் 15,000 ஐஅநா டொலருக்கு அல்லது வேறு வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமானதற்குக் குறைவாகவிருக்குமிடத்து, அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கான அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிக்கான தோதான வெளிப்படுத்துகை ஒன்றின்மீது].

(ஈ) கணக்குவைத்திருப்பவரைப் பொருட்படுத்தாது, தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள், வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது கரைகடந்த வங்கித்தொழிற் கூறில் பேணப்பட்ட கணக்குகள் என்பவற்றிலிருந்தான கைமாற்றல்கள்.

(உ) கணக்கு வைத்திருப்பவர் இலங்கைக்கு வெளியே வதிவுள்ளவராகவிருக்குமிடத்து அல்லது இலங்கையில் வதிகின்ற நாட்டினத்தவர் அல்லாதவராகவிருக்குமிடத்து, அதே கணக்கு வைத்திருப்பவரின் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கிலிருந்தான கைமாற்றல்கள்.

(ஊ) மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின்மூலம் அனுமதிக்கப்பட்டவாறு அதே கணக்கு வைத்திருப்பவரின் மூலதனக் கொடுக்கல்வாங்கல்கள் ரூபாக் கணக்கிலிருந்தான கைமாற்றல்கள்.

(எ) வேறெவரேனுமாளின் தூதுவ வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்தான கைமாற்றல்கள்.

(ஏ) மூலக் கைமாற்றல், தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கைப் பற்றுவைப்பதன்மூலம் செய்யப்பட்டிருப்பின் [அல்லது இக்கட்டளை பயனுடையதாக வருமுன்னர் கணக்கு வைத்திருப்பவரின் வதிவற்றவர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதிவுள்ளவர் வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது வதிவுள்ள நாட்டினத்தவர் அல்லாதவரின் வெளிநாட்டு நாணயக் கணக்கு என்பவற்றிலிருந்து செய்யப்பட்டிருப்பின்] வெளிநாட்டு நாணயத்தில் இலங்கையில் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து எழுகின்ற மூலதனம், மூலதன ஈட்டுகைகள் மற்றும் வேறு பெறுகைகள்.

(ஐ) மூல முதலீடு இக்கட்டளை பயனுக்கு வருமுன்னர் கணக்கு வைத்திருப்பவரின் வதிவற்றவர் வெளிநாட்டு நாணயக் கணக்கை, வதிவுள்ளவர் வெளிநாட்டு நாணயக் கணக்கை அல்லது வதிவுள்ள நாட்டினத்தவர் அல்லாதவரின் வெளிநாட்டு நாணயக் கணக்கைப் பற்றுவைப்பதன்மூலம் செய்யப்பட்டிருப்பின், வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினுள் வெளிநாட்டு முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட மூலதனமும் மூலதன ஈட்டுகைகளும்.

(ஒ) வெளிநாட்டுப் பயண அட்டை தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து நிரப்பப்பட்டிருந்த தொகைவரை, அதே கணக்கு வைத்திருப்பவரின் வெளிநாட்டுப் பயண அட்டையில் எஞ்சியுள்ள பயன்படுத்தப்படாத மீதி.

(ஓ) கணக்கு வைத்திருப்பவர் இலங்கையில் வதிகின்ற நாட்டினத்தவர் அல்லாத ஊழியரொருவராகவிருக்குமிடத்து, மாதாந்தச் சம்பளமாக, தொழில் நன்மைகளாக மற்றும் வேறு தொடர்புபட்ட நன்மைகளாகத் தொழில்தருநர்களின் இலங்கை ரூபாக் கணக்கிலிருந்தான கைமாற்றல்கள்.

(ஔ) கணக்கு வைத்திருப்பவர் இலங்கையில் வதிகின்ற நாட்டினத்தவர் அல்லாத ஊழியரொருவராகவிருக்குமிடத்து, வரவுவைக்கும் நாளன்று பெறப்பட்ட செலாவணி வீதத்தில் மாற்றப்பட்ட, வெளிநாட்டுக்கு அனுப்பப்படுவதற்காக மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்ட இலங்கை ரூபாக்களிலான தொகைகள்.

(க) காலத்துக்குக்காலம் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகளிலிருந்தான கொடுக்கல் வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின்மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, அத்தகைய கொடுக்கல்வாங்கல்களிலிருந்தான கைமாற்றல்கள்.

(ங) சட்டத்தின் 8 (3) ஆம் பிரிவின் நியதிகளின்படி கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து இலங்கைக்கு வெளியேயிருந்து அனுப்பப்படும் அனுப்புதொகைகள்.

(ச) கணக்கில் வைத்திருக்கப்பட்ட நிதிகளின்மீது வெளிநாட்டு நாணயத்தில் உழைக்கப்பட்ட வட்டி.

(3) அனுமதிக்கப்பட்ட பற்றுகள்

(அ) இலங்கைக்கு வெளியே செய்யப்பட்ட எவையேனும் வெளித்திரும்பல் அனுப்புதொகைகள்.

(ஆ) இலங்கை ரூபாக்களில் இலங்கையிலான செலுத்தீடுகள்.

(இ) கணக்கு வைத்திருப்பவரைப் பொருட்படுத்தாது, தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கான அல்லது கரைகடந்த வங்கித்தொழிற் கூறுகளில் பேணப்பட்ட கணக்குகளுக்கான கைமாற்றல்கள்.

(ஈ) கணக்கு வைத்திருப்பவர் இலங்கைக்கு வெளியே வதிபவராகவிருக்குமிடத்து, அல்லது இலங்கையில் வதிகின்ற நாட்டினத்தவர் அல்லாதவராகவிருக்குமிடத்து, அதே கணக்கு வைத்திருப்பவரின் ஓர் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்குக்கான கைமாற்றல்கள்.

(உ) ஒரு வெளிநாட்டுப் பயண அட்டையை உள்நிரப்புவதற்காக நிதிகளைக் கைமாற்றுதல்.

(ஊ) தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கிலுள்ள நிதிகளைப் பயன்படுத்தி வெளிநாட்டுச் செலாவணியில் இலங்கையில் செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட ஏதேனும் முதலீடு தொடர்பிலான கைமாற்றல்கள்.

(எ) மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின் மூலம் அனுமதிக்கப்பட்டவாறு பயண நோக்கத்துக்காக 10,000 ஐஅநா டொலர்வரை (அல்லது வேறேதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமானதுவரை) வெளிநாட்டு நாணயத் தாள்களிலான மீளப்பெறுகை.

(ஏ) கணக்கு வைத்திருப்பவர் இலங்கைக்கு வெளியே வதிகின்ற நாட்டினத்தவரல்லாதவராகவிருந்து இலங்கைக்குத் தற்காலிகமாக வருகைதருகின்றவிடத்து, வெளிநாட்டு நாணயத்திலான மீளப்பெறுகைகள்.

(ஐ) கணக்கு வைத்திருப்பவர் இலங்கையில் வதிகின்ற நாட்டினத்தவர் அல்லாத ஊழியரொருவராக இருக்குமிடத்து, அத்தகைய தொழில்தருநருக்கு வருமதியான சம்பளங்கள் மற்றும் வேறேதேனும் கொடுப்பனவின் மிகைக்கொடுப்பனவு தொடர்பில் தொழில்தருநரின் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளுக்கான கைமாற்றல்கள்.

(ஒ) இவ்வட்டவணையின் 1 ஆம் பந்தியின் (2) (ஓ) என்னும் உட்பந்தியின்படி, இலங்கையில் வதிபவராகவுள்ள நாட்டினத்தவர் அல்லாத ஊழியரொருவருக்கு மிகைக்கொடுப்பனவொன்று செய்யப்படும் பட்சத்தில் தொழில்தருநர்களின் இலங்கை ரூபாக் கணக்குக்கான கைமாற்றல்கள்.

(ஓ) அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளினால் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, கொடுக்கல்வாங்கல்கள் அல்லது வகுதியினவான கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் வெளிநாட்டு நாணயத்தில் வதிவோருக்கான கொடுப்பனவுகள்.

(ஔ) காலத்துக்குக்காலம் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகளிலிருந்தான கொடுக்கல் வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின்மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள்.

**2. வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள் (விவெநாக)**

(1) தகவுடைய ஆட்கள்

(அ) வெளிநாட்டுச் செலாவணியை உழைக்கும், இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற பின்வரும் ஆட்கள்:

(i) இலங்கையில் வதிகின்ற தனியாளொருவர்.

(ii) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட ஒரு தனியுரிமையாண்மையின் உரிமையாளர் அல்லது பங்காண்மையின் பெரும்பான்மையோரான பங்காளர்கள் இலங்கையில் வதியுமிடத்து, (இரு பங்காளர்களுடனான பங்காண்மையொன்றின் விடயத்தில் குறைந்தபட்சம் ஒரு பங்காளரேனும் இலங்கையில் வதிபவராகவிருத்தல் வேண்டும்) அத்தனியுரிமையாண்மை அல்லது பங்காளர்.

(iii) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்டவொரு கம்பெனி.

(iv) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் கடல்கடந்த கம்பெனியொன்றாகப் பதிவுசெய்யப்பட்ட, இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டவொரு கம்பெனி.

(v) இயைபான துறை அமைச்சுச் செயலாளரின் அல்லது தோதான அதிகாரியின் விதப்புரையுடன் அரச நிறுவனமொன்று.

(vi) முறையே வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதியினாலும் இலங்கைக் குடியியல் வான்செலவு அதிகாரசபையின் பணிப்பாளர் தலைமையதிபதியினாலும் வழங்கப்பட்ட செல்லுபடியான உரிமத்துடன் அல்லது அதிகாரவளிப்புக் கடிதத்துடன் ஒரு வெளிநாட்டுக் கப்பற்றொழிற் கம்பெனியின் அல்லது வானூர்திக் கம்பெனியின் சார்பில் (வெளிநாட்டு முதல்வர்) இலங்கையில் கப்பற்றொழில் முகவராக அல்லது பொது விற்பனை முகவராகத் தொழில் கொண்டுநடாத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவர்.

(ஆ) அந்த அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியிடம் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியிடம் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றைப் பேணிவந்த ஓர் இறந்துள்ள ஆளின் மரணச்சொத்தினது நிருவாகம் பூர்த்திசெய்யப்படும்வரை அத்தகைய இறந்துள்ள ஆளின் மரணச் சொத்தினது நிருவாகி அல்லது நிறைவேற்றுநர்.

(இ) அந்த அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியிடம் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியிடம் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றைப் பேணிவந்த கம்பெனியொன்றின் பெயரில், வழக்கு நடவடிக்கைகள் முடிவுறும்வரை பெறுநர் அல்லது ஒழிப்போன் ஒருவர்.

(2) அரசசார்பற்ற ஒழுங்கமைப்பொன்று வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றைத் திறப்பதற்கும் பேணுவதற்கும் அனுமதிக்கப்படுதலாகாது.

(3) அனுமதிக்கப்பட்ட வரவுகள்

(அ) பண்டங்களையும் சேவைகளையும் ஏற்றுமதி செய்தல், ஏற்றியிறக்குநிலைய வியாபாரம், கணக்கு வைத்திருப்பவரினால் பொறுப்பேற்கப்பட்ட கடல்கடந்த கருத்திட்டங்கள், இலங்கைக்கு வெளியே செய்யப்பட்ட முதலீடுகள் மற்றும் இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவருக்கு உள்ளூரில் வழங்கப்பட்ட பண்டங்கள் என்பன தொடர்பில் வங்கித்தொழில் முறைமையினூடாக வெளிநாட்டிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியில் பெறப்பட்ட அனுப்புதொகைகள்.

(ஆ) கடல்கடந்த தொழில்தருநர்களுக்குச் சேவைகளையளிக்கின்ற இலங்கையரின் வேதனங்களை அத்துடன்/அல்லது உழைப்புக்களைச் செலுத்தீடுசெய்வதற்காகக் கணக்கு வைத்திருப்பவர் எந்தத் தொழில்தருநரிடம் ஒழுங்கேற்பாடொன்றைக் கொண்டுள்ளாரோ அத்தகைய கடல்கடந்த தொழில்தருநரிடமிருந்து வங்கித்தொழில் முறைமையினூடாக வெளிநாட்டுச் செலாவணியில் பெறப்பட்ட அனுப்புதொகைகள்.

(இ) இலங்கையிலுள்ள கணக்குவைத்திருப்பவரினால் இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவருக்கு வழங்கப்பட்ட பண்டங்களும் சேவைகளும் தொடர்பில் அத்தகைய ஆளினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பயணிகள் காசோலைகள், வங்கி வரைவுகள் அல்லது நாணயத்தாள்கள் என்ற வடிவத்திலான வெளிநாட்டு நாணயம்.

(ஈ) கணக்கு வைத்திருப்பவர் இலங்கையில் ஒரு கப்பற்றொழில் முகவராக அல்லது ஒரு பொது விற்பனை முகவராக இருக்குமிடத்து, அந்தந்த முகவராண்மை உடன்படிக்கைகளின்கீழான நோக்கங்களுக்காக அந்தந்த வெளிநாட்டு முதல்வரிடமிருந்து அல்லது வெளிநாட்டு முதல்வரின் சார்பில் ஒரு மூன்றாந்திறத்தவரிடமிருந்து வங்கித்தொழில் முறைமையினூடாக வெளிநாட்டுச் செலாவணியில் பெறப்பட்ட அனுப்புதொகைகள்.

(உ) ஒரு வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குக்கெதிரான அல்லது கரைகடந்த வங்கித்தொழிற் கூறில் பேணப்பட்டவொரு கணக்குக்கெதிரான அனுப்புதொகை என்றவகையாக, வெளிநாட்டு முதல்வரின்சார்பில் இலங்கையிலுள்ள கப்பற்றொழில் முகவராக அல்லது பொது விற்பனை முகவராக உள்ள கணக்கு வைத்திருப்பவரினால் வெளிநாட்டுச் செலாவணியில் சேகரிக்கப்பட்ட கப்பற்சரக்குக் கட்டணம்.

(ஊ) (அதாவது, வெளிநாட்டு நாணயத்தாள்கள் 15,000 ஐஅநா டொலரை அல்லது வேறு வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமானதை விஞ்சுமிடத்து அல்லது அதற்குச் சமமாகவிருக்குமிடத்து சுங்கத் திணைக்களத்துக்கான வெளிப்படுத்துகையின்மீது அல்லது அத்தகைய வெளிநாட்டு நாணயத்தாள்கள் 15,000 ஐஅநா டொலருக்கு அல்லது வேறு வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமானதற்குக் குறைவாகவிருக்குமிடத்து அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கான அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிக்கான தோதான வெளிப்படுத்துகையின்மீது) கணக்கு வைத்திருப்பவரினால் வெளிப்படுத்துகையின்மேல் இலங்கையினுள் கொண்டுவரப்படும் வெளிநாட்டு நாணயம்.

(எ) கணக்கு வைத்திருப்பவரைப் பொருட்படுத்தாது, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்தான அல்லது கரைகடந்த வங்கித்தொழிற்கூறில் பேணப்பட்ட கணக்குகளிலிருந்தான கைமாற்றல்கள்.

(ஏ) வதிபவரொருவருக்கு வழங்கப்பட்ட பண்டங்களுக்கான அல்லது சேவைகளுக்கான பிரதிபயனாகவுள்ள கணக்குவைத்திருப்பவரின் சார்பில் வெளிநாட்டுச் செலாவணியில் பெறப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் பெறுகைகள் அல்லது கொடுக்கல்வாங்கல்களின் வகுதிகள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளினால் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு அக்கொடுப்பனவுகள்.

(ஐ) மத்திய வங்கியின் முன்னங்கீகாரத்துடன், ஓர் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியின் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியின் உள்ளக வங்கித்தொழிற் கூறிலிருந்து அல்லது கரைகடந்த வங்கித்தொழிற் கூறிலிருந்து கணக்கு வைத்திருப்பவரினால் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடன்களினதும் முற்பணங்களினதும் வரும்படிகள்.

(ஒ) சொத்தானது வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கைப் பற்றுவைப்பதன்மூலம் கொள்ளப்பட்டுள்ளவிடத்து, கணக்குவைத்திருப்பவரின் ஏதேனும் வெளிநாட்டுச் சொத்தின் விற்பனையிலிருந்தான வரும்படிகள் அல்லது அதன் ஏதேனும் பாகம்.

(ஓ) மூலக் கைமாற்றல் வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கைப் பற்றுவைப்பதன்மூலம் (அல்லது இக்கட்டளை பயனுடையதாக வருவதற்குமுன்னர் கணக்குவைத்திருப்பவரின் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கிலிருந்து) செய்யப்பட்டிருப்பின், வெளிநாட்டு நாணயத்தில் இலங்கையில் செய்யப்பட்ட முதலீடுகளிலிருந்து எழுகின்ற மூலதனம், மூலதன ஈட்டுகைகள் மற்றும் வேறு பெறுகைகள்.

(ஔ) மூல முதலீடு, இக்கட்டளை பயனுடையதாக வருவதற்குமுன்னர் கணக்கு வைத்திருப்பவரின் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்கைப் பற்றுவைப்பதன்மூலம் செய்யப்பட்டிருப்பின், வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றினுள் வெளிநாட்டு முதலீடுகளிலிருந்து பெறப்பட்ட மூலதனம் மற்றும் மூலதன ஈட்டுகைகள்.

(க) இவ்வட்டவணையின் 2 ஆம் பந்தியின் உற்பத்திகள் (4)(இ) மற்றும் (4)(ஈ) என்பவற்றின்படி வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கைப் பற்றுவைப்பதன்மூலம் கணக்கு வைத்திருப்பவரினால் பெறப்பட்ட பயன்படுத்தப்படாத வெளிநாட்டு நாணயம்.

(ங) வெளிநாட்டுப் பயண அட்டை வியாபார வெளிநாட்டுச் செலாவணிக் கணக்கிலிருந்து நிரப்பப்பட்டிருந்த தொகைவரை, அதே கணக்கு வைத்திருப்பவரின் அத்தகைய வெளிநாட்டுப் பயண அட்டவணையில் எஞ்சியுள்ள பயன்படுத்தப்படாத மீதி.

(ச) தகவுடைய வாடிக்கையாளர்களுக்கும் கூட்டுக் காப்புறுதியாளர்களுக்கும் வழங்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் பெயர்குறிக்கப்பட்ட காப்புறுதிப்பத்திரங்களின்மீது கணக்குவைத்திருப்பவரினால் பெறப்பட்ட காப்புறுதிக் கட்டுப்பணங்களும் இலங்கைக் காப்புறுதிச் சபையிடம் பதிவுசெய்யப்பட்ட காப்புறுதிக் கம்பெனிகளினால் மீள்காப்புறுதியாளர்களிடமிருந்தும் தேசியக் காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்திடமிருந்தும் பெறப்பட்ட உரிமைக்கோரிக்கைகளும்.

(ஞ) சம்பளங்களினதும் வேறெவையேனும் நன்மைகளினதும் மிகைக்கொடுப்பனவுகளாகவுள்ள, இலங்கையில் வதிகின்ற நாட்டினத்தவரல்லாத ஊழியரின் தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளிலிருந்தான கைமாற்றல்கள்.

(ட) காலத்துக்குக்காலம் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகளிலிருந்தான கொடுக்கல் வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின்மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள்.

(ண) சட்டத்தின் 8(3) ஆம் பிரிவின் நியதிகளின்படி கணக்கு வைத்திருப்பவரிடமிருந்து இலங்கைக்கு வெளியேயிருந்து அனுப்பப்படும் அனுப்புதொகைகள்.

(த) கணக்கில் வைத்திருக்கப்பட்ட நிதிகளின்மீது வெளிநாட்டு நாணயத்தில் உழைக்கப்பட்ட வட்டி.

(4) அனுமதிக்கப்பட்ட பற்றுக்கள்

(அ) இலங்கைக்கு வெளியே செய்யப்பட்ட எவையேனும் வெளித்திரும்பல் அனுப்புதொகைகள்.

(ஆ) இலங்கை ரூபாக்களில் இலங்கையிலான செலுத்தீடுகள்.

(இ) மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின்மூலம் அனுமதிக்கப்பட்டவாறாகப் பயண நோக்கத்துக்காக 10,000 ஐஅநா டொலர்வரை (அல்லது வேறேதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமானதுவரை) வெளிநாட்டு நாணயத்தாள்களிலான மீளப்பெறுதல்.

(ஈ) தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட உறுதிப்படுத்துகையைச் சமர்ப்பிப்பதன்மேல் வெளிநாட்டில் பட்டைதீட்டப்பட்டு மெருகூட்டப்பட்ட அல்லது பட்டைதீட்டப்படாத இரத்தினக்கற்களையும் வேறு மூலப்பொருட்களையும் கொள்வனவு செய்யும் நோக்கத்துக்காக இரத்தினக்கல் மற்றும் ஆபரண வியாபாரிகளினால் ஒருதடவையில் 50,000 ஐஅநா டொலர் வரை (அல்லது வேறேதேனும் வெளிநாட்டு நாணயத்தில் சமமானதுவரை) வெளிநாட்டு நாணயத் தாள்களிலான மீளப்பெறுதல்.

(உ) கணக்குவைத்திருப்பவர் இலங்கையில் ஒரு கப்பற்றொழில் முகவராக அல்லது பொது விற்பனை முகவராக இருக்குமிடத்து, அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியினால் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க காரணங்களுடனான கோரிக்கையொன்றின்மீது, வெளிநாட்டு முதல்வரிடமிருந்து அல்லது வெளிநாட்டு முதல்வரின் சார்பில் பெயர்குறிக்கப்பட்ட மூன்றாந்திறத்தவர்களிடமிருந்து பெறப்பட்ட உட்திரும்பல் அனுப்புதொகைக்கெதிராகக் கப்பற்றலைவர்களுக்கான பணம் என்றவகையாக ஒவ்வொரு வருகைக்கும் ஒவ்வொரு கலத்துக்கும் 50,000 ஐஅநா டொலர் வரை (அல்லது வேறேதேனும் வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமானதுவரை) வெளிநாட்டு நாணயத் தாள்களில் மீளப்பெறுதல்.

(ஊ) கணக்குவைத்திருப்பவர் இலங்கையில் ஒரு கப்பற்றொழில் முகவராக அல்லது பொது விற்பனை முகவராக இருக்குமிடத்து, மேன்மிகையான நிதிகளை வெளிநாட்டு முதல்வருக்குத் திருப்பியனுப்புதல்; ஆயின், அரசாங்கத்துக்குச் செலுத்தப்படற்பாலதான வரியும் முகவராண்மைத் தரகும் உட்பட, இலங்கையில் வெளிநாட்டு முதல்வரின் எல்லா உள்ளூர்ப் பொறுப்புக்களையும் எதிர்கொள்வதற்குக் கணக்கில் போதிய நிதிகள் வைத்திருக்கப்பட்டுள்ளன என்ற பொருள்பட, கணக்குவைத்திருப்பவரிடமிருந்து (அதாவது முகவரிடமிருந்து) எழுத்திலான உறுதிப்படுத்துகை பெறப்படுதல் வேண்டும்.

(எ) கணக்குவைத்திருப்பவரைப் பொருட்படுத்தாது, வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்குகள், தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகள் அல்லது கரைகடந்த வங்கித்தொழிற் கூறில் பேணப்பட்ட கணக்குகள் என்பவற்றுக்கான கைமாற்றல்கள்.

(ஏ) அதே கணக்கு வைத்திருப்பவரின் வெளித்திரும்பல் முதலீட்டுக் கணக்குக்கான கைமாற்றல்கள்.

(ஐ) கணக்கு வைத்திருப்பவரினால் அத்தகைய வெளிநாட்டுக் கடன்தருநரிடமிருந்து பெறப்பட்ட வெளிநாட்டு நாணயக் கடனை மீளக்கொடுப்பனவு செய்யும் நோக்கத்துக்காக இலங்கைக்கு வெளியே வதிகின்றவரின் உட்திரும்பல் முதலீட்டுக் கணக்கொன்றுக்கான கைமாற்றல்கள்.

(ஒ) ஒரு வெளிநாட்டுப் பயண அட்டையை உள்நிரப்புவதற்காக நிதிகளைக் கைமாற்றுதல்.

(ஓ) கணக்கு வைத்திருப்பவரினால் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளிடமிருந்து அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிகளிடமிருந்து பெறப்பட்ட தனிசுசார் கொடுப்பனவுகளும் வெளிநாட்டு நாணயத்தை மீளக் கொடுப்பனவு செய்தலும்.

(ஔ) வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கிலுள்ள நிதிகளைப் பயன்படுத்தி வெளிநாட்டு நாணயத்தில் இலங்கையில் செய்யப்படுவதற்கு அனுமதிக்கப்பட்ட ஏதேனும் முதலீடு தொடர்பிலான கைமாற்றல்கள்.

(க) வெளிநாட்டு நாணயத்தில் பெயர்குறிக்கப்பட்ட காப்புறுதிப்பத்திரங்கள், உள்ளூர் அல்லது கடல்கடந்த மீள்காப்புறுதியாளர்களுக்கும் தேசியக் காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்துக்குமான கட்டுப்பணங்கள் மற்றும் இலங்கைக் காப்புறுதிச் சபையிடம் பதிவு செய்யப்பட்ட காப்புறுதிக் கம்பெனிகளினாலான தரகுப்பணம் என்பன தொடர்பில் தகவுடைய வாடிக்கையாளர்களுக்கும் கூட்டுக்காப்புறுதியாளர்களுக்கும் உரிமைகோரிக்கைகளின் கொடுப்பனவுகள்.

(ங) அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின்மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, கொடுக்கல்வாங்கல்கள் அல்லது வகுதியினவான கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் வெளிநாட்டு நாணயத்தில் வதிவுள்ளோருக்கான கொடுப்பனவுகள்.

(ச) காலத்துக்குக்காலம் மத்திய வங்கியினால் பேணப்படுவதற்கு அனுமதிக்கப்படக்கூடிய வேறேதேனும் வகுதியினவான கணக்குகளிலிருந்தான கொடுக்கல் வாங்கல்கள் அல்லது கைமாற்றல்கள் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புகளின்மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள அளவுக்கு, அத்தகைய கொடுக்கல்வாங்கல்களுக்கான கைமாற்றல்கள்.

(5) எச்சூழ்நிலைகளின்கீழும் இலங்கை ரூபாக்கள் வெளிநாட்டு நாணயமாக மாற்றப்பட்டு ஒரு வியாபார வெளிநாட்டு நாணயக் கணக்கினுள் வரவுவைக்கப்படுதலாகாது.

3. இவ்வட்டவணையின் நோக்கத்துக்காக -

"தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை" என்பது, 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை என்று பொருளாகும்;

"இலங்கைக் குடியியல் வான்செலவு அதிகாரசபை" என்பது, 2002 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, குடியியல் வான்செலவு அதிகாரசபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட குடியியல் வான்செலவு அதிகாரசபை என்று பொருளாகும்;

"வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதி" என்பது, 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட வணிகக் கப்பற்றொழில் பணிப்பாளர் தலைமையதிபதி என்று பொருளாகும்;

"தேசியக் காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்" என்பது, 2006 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, தேசியக் காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேசியக் காப்புறுதி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் என்று பொருளாகும்.

**2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

*8 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) என்னும் பந்திகளினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிபராகவுள்ள ஆளொருவர், எந்த நோக்கங்கள், எல்லைகள், நியதி நிபந்தனைகளுக்கு அமைந்தவராக பின்வருவனவற்றைச் செய்தல் வேண்டுமோ, அந்த நோக்கங்கள், எல்லைகள் நியதி நிபந்தனைகளை இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறாக இக்கட்டளை மூலம் விதித்துரைக்கின்றேன் :-*

(அ) ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தை அல்லது இலங்கை நாணயத்தை இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்தல் வேண்டும் அல்லது இலங்கையினுள் இறக்குமதி செய்தல் வேண்டும் ;

(ஆ) அவரது உடைமையில் அல்லது இலங்கையிலுள்ள ஒரு வங்கியில் வெளிநாட்டுச் செலாவணியை வைத்திருத்தல் வேண்டும்;

2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தினால் நீக்கப்பட்டவாறான செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் இதற்கான அட்டவணை II இல் விதித்துரைக்கப்பட்டுள்ளவையுமான கட்டளைகள் இத்தால் அழித்தொழிக்கப்படுகின்றன.

ரணில் விக்ரமசிங்க,
தேசியக் கொள்கைகள் மற்றும்
பொருளாதார அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2017, நவெம்பர் 17.

**அட்டவணை I**

பாகம் ***I***

**வெளிநாட்டு நாணயத்தின் அல்லது இலங்கை நாணயத்தின் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்கான நோக்கங்கள் , வரையறைகள், நியதிகள் மற்றும் நிபந்தனைகள்**

1. (1) இலங்கையிலிருந்து புறப்பட்டுச் செல்கின்ற அல்லது இலங்கையில் வந்திறங்குகின்ற எவரேனும் ஆள், அத்தகைய ஆளால் நாணயத்தாள்கள், வங்கி வரைவுகள், காசோலைகள், பயண அட்டைகள் போன்ற வடிவங்களில் சட்டமுறையாகக் கொள்ளுதல் செய்யப்பட்ட ஏதேனும் வெளிநாட்டுச் செலாவணித் தொகையினை, அத்தகைய வெளிநாட்டுச் செலாவணியின் மொத்தப்பெறுமதி ஐக்கிய அமெரிக்க டொலர் 15,000 இனை அல்லது வேறு வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான தொகையினை விஞ்சுகின்றதாகவிருப்பின், முறையே புறப்பட்டுச் செல்கின்ற அல்லது வந்திறங்குகின்ற தளத்திலுள்ள சுங்கத் திணைக்களத்துக்குச் செய்யப்பட்ட வெளிப்படுத்துகை ஒன்றுக்கமைய எடுத்துச் செல்லலாம்.

(2) எவ்வாறாயினும், இலங்கையில் வந்திறங்குகின்ற ஆளொருவர், ஐக்கிய அமெரிக்க டொலர் 10,000 இனை அல்லது வேறு வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமான தொகையினை விஞ்சுகின்ற வெளிநாட்டு நாணயத்தாள்களைத் திருப்பி எடுத்துச் செல்வதற்கு உட்கருதுகின்றவிடத்து, அல்லது ஐக்கிய அமெரிக்க டொலர் 10,000 இனை அல்லது வேறு வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான தொகையினை விஞ்சுகின்ற வெளிநாட்டு நாணயத்தாள்களை எடுத்துக் கொண்டு இலங்கையிலிருந்து புறப்பட்டுச்செல்ல உட்கருதுகின்றவிடத்து, அத்தகைய ஆள், சுங்கத் திணைக்களத்துக்கு வெளிப்படுத்துகையொன்றைச் செய்வதற்குத் தேவைப்படுத்தப்படுகின்றார்.

2. இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற எவரேனும் ஆள், இலங்கை ரூபா 20,000 பெறுமதிவரையான இலங்கை நாணயத்தை முறையே, இலங்கைக்கு வெளியே எடுத்துச் செல்லலாம் அல்லது இலங்கையினுள் கொண்டு வரலாம்.

3. எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி, அவரது தொழிலின் சாதாரண நடவடிக்கையில் அல்லது சாதாரண நடவடிக்கைக்காகவும் அத்துடன் அவரது அதிகாரமளிப்பின் நியதிகளுக்குட்பட்டும் கொள்ளுதல் செய்யப்பட்டுள்ள வெளிநாட்டு நாணயத்தை இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யலாம் அல்லது இலங்கைக்குள் இறக்குமதி செய்யலாம்.

4. இப்பாகத்தின் நோக்கத்திற்கென :-

"அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## பாகம் **II**

## வெளிநாட்டுச் செலாவணியை உடைமையில் வைத்திருப்பதற்கான நோக்கங்கள், வரையறைகள், நியதிகள் மற்றும் நிபந்தனைகள்

### 1. இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற ஆளொருவரினால் வெளிநாட்டுச் செலாவணி வைத்திருக்கப்படுதல்

(1) இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற எவரேனும் ஆள் இதன் 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட மட்டுப்பாட்டுக் காலப்பகுதியைப் பொருட்படுத்தாது, ஏதேனும் காலப்பகுதிக்கு, ஐக்கிய அமெரிக்க டொலர் 10,000 இன், அல்லது வேறு வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான பெறுமதி வரை அவருடைய உடைமையில் பிடித்து வைத்திருக்கலாம். ஆயின், அத்தகைய வெளிநாட்டு நாணயம் பின்வருவனவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் ;

(அ) அத்தகைய ஆளின் வெளிநாட்டுப் பயணத்துக்கென அத்தகைய ஆளினால் அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி ஒருவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டு, இலங்கைக்குத் திரும்பும் பொழுது பயன்படுத்தப்படாத நாணயங்களாக திருப்பிக் கொண்டுவரப்பட்ட வெளிநாட்டு நாணயம் ; அல்லது

(ஆ) அத்தகைய ஆளினால் இலங்கைக்கு வெளியே வதியும் ஆளொருவருக்கு, அளிக்கப்பட்ட சேவையொன்றுக்கான அல்லது வழங்கப்பட்ட பண்டங்களுக்கான கொடுப்பனவு என்றவாறாக, அல்லது வேறு ஏதேனும் சட்டமுறையான மூலத்திலிருந்து, இலங்கைக்கு வெளியேயிருந்து, அத்தகைய ஆளினால் பெறப்பட்ட வெளிநாட்டு நாணயம் ; அல்லது

(இ) பயண நோக்கத்துக்கென அத்தகைய ஆளினால் அவரது தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து அல்லது தொழில்சார் வெளிநாட்டு நாணயக் கணக்கிலிருந்து மீளப்பெறப்பட்ட வெளிநாட்டு நாணயத்தாள்கள்.

(2) (அ) எவரேனும் ஆள், அத்தகைய ஆளினால் இலங்கைக்கு வெளியே வதிகின்ற ஆளொருவருக்கு, அல்லது எந்தப் பயணிக்கு அத்தகைய பண்டங்களும் சேவைகளும் வழங்கப்பட்டனவோ அந்தப் பயணியின் வதிவிட அந்தஸ்தைப் பொருட்படுத்தாது, இலங்கையிலுள்ள தளங்களில் இலங்கைக்கு வந்திறங்குகின்ற அல்லது இலங்கையிலிருந்து புறப்பட்டுச் செல்கின்ற பயணிகளுக்கு தீர்வையற்ற சலுகையின் கீழ் பண்டங்களையும் சேவைகளையும் வழங்குவதற்காக அனுமதியளிக்கப்பட்ட தொழிலொன்றைக் கொண்டு நடாத்தும் இலங்கையிலுள்ள அல்லது இலங்கையில் வதிகின்ற ஆளொருவருக்கு வழங்கப்பட்ட பண்டங்களும் சேவைகளும் தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயத்தை அவரது உடைமையில் பிடித்து வைத்திருக்கலாம் ;

(ஆ) அத்தகைய ஆள், அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நாணயத்தை அத்தகைய வெளிநாட்டு நாணயத்தை ஏற்றுக்கொண்ட ஆளின் பெயரிலுள்ள தொழில்சார் வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றில் வைப்புச் செய்யாமல், அல்லது அத்தகைய பயன்பட சான்றைச் சமர்பிப்பதன்மேல், அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவருக்கு அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியொருவருக்கு விற்பனை செய்யாமல், ஏற்புச் செய்யப்பட்ட திகதியிலிருந்து 7 நாட்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு பிடித்துவைத்தலாகாது ;

(3) இலங்கைக்கு வெளியே வதிகின்ற எவரேனும் ஆள், அத்தகைய வெளிநாட்டு நாணயம் அவர் இலங்கைக்கு வெளியே இருக்கும் போது, அல்லது அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிகளிடம் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிகளிடம் பேணப்படும் வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளிலிருந்து அவரால் கொள்ளுதல் செய்யப்பட்டதாகவிருப்பின், இலங்கையில் வரையறையின்றி அவரது உடைமையில் பிடித்துவைக்கலாம்.

2. வெளிநாட்டுச் செலாவணியைப் பிடித்துவைத்திருப்பதற்கான காலப்பகுதி பின்வருமாறு இருத்தல் வேண்டும் :-

(1) அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கு அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிக்கு அவரால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றில் குறிப்பிடப்பட்ட நோக்கமொன்றுக்காக, அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியொருவரிடமிருந்து வெளிநாட்டு நாணயத்தைப் பெறுகின்றதும், அத்தகைய நோக்கத்துக்கென அதனைப் பயன்படுத்தாதுமான எவரேனும் ஆள், அத்தகைய வெளிநாட்டு நாணயத்தை இலங்கை ரூபாவுக்கு மாற்றாமல், அத்தகைய வேளிநாட்டு நாணயத்தைப் பெற்றுக்கொண்ட திகதியிலிருந்து தொண்ணூறு (90) நாட்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு பிடித்துவைத்திருத்தலாகாது.

(2) (அ) அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரிக்கு அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரிக்கு அவரால் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றில் குறிப்பிடப்பட்ட நோக்கமொன்றுக்காக, அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரியொருவரிடமிருந்து வெளிநாட்டு நாணயத்தைப் பெறுகின்ற எவரேனும் ஆள், சொல்லப்பட்ட வெளிநாட்டு நாணயத்தை அல்லது அதன் பாகத்தை இலங்கைக்குத் திருப்பிக் கொண்டுவந்ததன் பின்னர், அத்தகைய ஆள், அத்தகைய வெளிநாட்டு நாணயத்தை இலங்கை ரூபாவுக்கு மாற்றாமல், அத்தகைய வெளிநாட்டு நாணயத்தைப் பெற்றுக்கொண்ட திகதியிலிருந்து தொண்ணூறு (90) நாட்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு பிடித்துவைத்திருத்தலாகாது.

(ஆ) எவ்வாறாயினும் 1 ஆம் பந்தியின் (1) (அ) என்னும் உட்பந்தியின் கீழ் ஐக்கிய அமெரிக்க டொலர் 10000 இன், அல்லது வேறு வெளிநாட்டு நாணயங்களில் அதற்குச் சமமான பெறுமதி வரை பயண நோக்கத்திற்கென வெளிநாட்டு நாணயத்தாள்களைப் பெற்றுக்கொண்ட ஆளொருவர், அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி அல்லது மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி ஒருவரிடத்தில் பேணப்படும் ஏலவேயுள்ள வெளிநாட்டு நாணயக் கணக்கொன்றில் வைப்புச் செய்வதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(3) ஊழியம், உயர்தொழில் வேலை என்பவற்றை முன்னெடுத்துச் செல்வதற்காக, அல்லது தொழிலொன்றை அமைத்துக்கொள்வதற்காக இலங்கைக்கு வெளியே செல்கின்றதும், அத்தகைய ஊழியம், உயர்தொழில் அல்லது தொழிலிருந்து வெளிநாட்டு நாணயத்தை உழைக்கின்ற அல்லது பெறுகின்ற அத்துடன் இலங்கைக்குத் திருப்பிக் கொண்டுவருகின்றதுமான எவரேனும் ஆள், அத்தகைய வெளிநாட்டு நாணயத்தை, இலங்கை ரூபாவுக்கு மாற்றாமல், அல்லது 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி அத்தகைய ஆளினால் திறக்கப்பட்டு மற்றும்/ அல்லது பேணப்படுகின்ற வெளிநாட்டுச் செலாவணிக் கணக்கொன்றில் வரவுவைக்காமல், அதன் திருப்பியனுப்பல் திகதியிலிருந்து தொண்ணூறு (90) நாட்களை விஞ்சாத காலப்பகுதியொன்றுக்கு பிடித்துவைப்பதற்கு உரித்துடையவராதலாகாது.

3. இப்பாகத்தின் நோக்கத்துக்கென -

"அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரி" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

"மட்டுப்படுத்தப்பட்ட வியாபாரி" என்பது, 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின் கீழ் வெளிநாட்டுச் செலாவணியில்

**அட்டவணை II**

| வர்த்தமானி இல. | வெளியிடப்பட்ட திகதி | நோக்கம் |
|---|---|---|
| 1947/13 | 2015.12.29 | 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தினால் நீக்கப்பட்டவாறான (423 ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின் கீழான கட்டளை. |

**அட்டவணை** II *(தொடர்ச்சி)*

| வர்த்தமானி இல. | வெளியிடப்பட்ட திகதி | நோக்கம் |
|---|---|---|
| 1947/15 | 2015.12.29 | 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தினால் நீக்கப்பட்டவாறான (423 ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 44 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுகின்ற 6,அ,ஆ என்னும் பிரிவின் கீழான கட்டளை. |
| 1686/50 | 2011.01.01 | 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச்செலாவணிச் சட்டத்தினால் நீக்கப்பட்டவாறான (423 ஆம் அத்தியாயமான நீக்கப்பட்ட) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் (1) ஆம் மற்றும் (2) ஆம் உட்பிரிவுகளின் கீழான கட்டளை. |
| 1631/36 | 2009.12.11 | 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தினால் நீக்கப்பட்டவாறான (423 ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழான கட்டளை. |
| 1854/3 | 2014.03.17 | 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தினால் நீக்கப்பட்டவாறான (423 ஆம் அத்தியாயமான) நீக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழான கட்டளை. |

வியாபாரம் செய்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட, அதிகாரமளிக்கப்பட்ட வியாபாரியொருவராகயில்லாத எவரேனும் ஆள், ஏதேனும் வகுப்பினதான அல்லது வகுப்பினவான ஆட்கள் எனப் பொருள்படும்.

ச.வ.பி. 10/2017

**2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம்**

31 ஆம் பிரிவின்கீழான கட்டளை

2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 31 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு தேசியக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர் ரணில் விக்ரமசிங்க ஆகிய நான், இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய ஆட்கள் மேற்கூறப்பட்ட சட்டத்தின் நோக்கத்துக்காக இலங்கையில் வதிபவர்களாகவிருத்தல் வேண்டுமென இக்கட்டளைமூலம் தீர்மானிக்கின்றேன்.

2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தினால் நீக்கப்பட்டு 1972 ஆம் ஆண்டு ஏப்பிறல் 21 ஆந்தேதிய 15007 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட (423 ஆம் அத்தியாயமான) செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பணிப்பு இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றது.

ரணில் விக்ரமசிங்க,
தேசியக் கொள்கைகள் மற்றும்
பொருளாதார அலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
2017, நவெம்பர் 17.

**அட்டவணை**

1. எவரேனும் இலங்கைப் பிரசை அல்லது இலங்கைப் பிரசையொருவரைத் திருமணஞ்செய்துள்ள எவரேனும் வெளிநாட்டுப் பிரசை, முற்போந்த 12 மாதங்களின்போது கூட்டுமொத்தத்தில் 183 நாட்களைக்கொண்ட அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதியொன்றுக்கு இலங்கையில் இருந்திருப்பின் அத்தகைய ஆள்.

*2. (அ) முற்போந்த 12 மாதங்களின்போது கூட்டுமொத்தத்தில் 182 நாட்களுக்கு மேற்படாத காலப்பகுதியொன்றுக்கு, விடுமுறை, கல்வி, தொழில், மருத்துவச் சிகிச்சை என்பவற்றுக்காக அல்லது வேறேதேனும் ஒத்த காரணத்துக்காக இலங்கைக்கு வெளியே தற்காலிகமாகச் சென்றுள்ளவரான;*

*(ஆ) வேறொரு நாட்டினால் வழங்கப்பட்ட மாணவ அல்லது அதற்குச் சமமான விசாவொன்றின்மீது இலங்கைக்கு வெளியே சென்றுள்ளவரான, எவரேனும் இலங்கைப் பிரசை.*

*3. (அ) இலங்கைக்கு வெளியே வதிகின்ற இலங்கை அரசாங்கத்தின் (எத்தகையதுமான எப்பெயரினாலும் அல்லது தலைப்புப்பெயரினாலும் பெயர்குறிக்கப்பட்ட) தூதுவப் பிரதிநிதிகள், தூதர்கள் அல்லது வியாபார ஆணையாளர்கள்;*

*(ஆ) இலங்கைப் பிரசையாகவுள்ள எவரேனுமாள் மேலே பந்தி 3 (அ) வில் குறிப்பீடுசெய்யப்பட்ட எவரேனும் ஆளின் பணியாட்டொகுதியுறுப்பினராகவிருந்தால் அவர்;*

*(இ) வெளிநாட்டில் ஆட்சேர்க்கப்பட்டவர்கள் தவிர, வெளிநாட்டில் சேவையாற்றுகின்ற ஓர் அரசாங்கக் கூட்டுத்தாபனத்தின், ஓர் அரசாங்க நிறுவனத்தின், ஒரு நியதிச்சட்டமுறையான சபையின், ஓர் உரிமமளிக்கப்பட்ட வங்கியின் அல்லது இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பெனியின் பணியாட்டொகுதியுறுப்பினரொருவர்;*

*(ஈ) மேலே 3 (அ) முதல் 3 (இ) வரையிலான பந்திகளின்கீழ் இலங்கையில் வதிபவராகக் கருதப்பட்ட எவரேனுமாளின் எவரேனும் குடும்பவுறுப்பினர்.*

*4. குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட இயைபான விசாவின்கீழ் இலங்கையில் வதிகின்ற அல்லது தொழிலுக்கமர்த்தப்படுகின்ற வெளிநாட்டுப் பிரசைகள், ஆனால் வேறு நாடுகளுக்கு இடைப்பெயர்விலுள்ள பயணிகள் அல்லது உல்லாசத்துக்காக அல்லது தொழிலுக்காக நாட்டில் சுற்றுலாப்பயணத்தை மேற்கொள்கின்ற வருகையாளர்கள் அல்ல.*

*5. இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட பின்வரும் நிறுவனங்களைச் சொந்தமாக வைத்திருக்கின்ற, கட்டுப்படுத்துகின்ற அல்லது முகாமைசெய்கின்ற ஆட்களின் பிரசாவுரிமையினது அந்தஸ்தைப் பொருட்படுத்தாது அத்தகைய நிறுவனங்கள்:*

- *(அ) இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பெனிகள்;*
- *(ஆ) இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமமளிக்கப்பட்ட வங்கிகளின் கிளைகளுட்பட (வெளிநாட்டு வங்கிகள்) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட கடல்கடந்த கம்பெனிகள்;*
- *(இ) கரைகடந்த கம்பெனிகளாகப் பதிவுசெய்யப்பட்ட கம்பெனிகள்;*
- *(ஈ) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட அரசசார்பற்ற ஒழுங்கமைப்புகளுட்பட, களரிகள், சங்கங்கள் அல்லது வேறெவையேனும் ஒழுங்கமைப்புக்கள்.*

*6. இறந்த நேரத்தில் இறந்தவர், அல்லது தீர்த்துவைத்தல் செய்யப்பட்ட நேரத்தில் தீர்த்துவைப்பவர் மேலே 1 முதல் 5 வரையிலான பந்திகளின் நியதிகளின்படி வதிபவராகவிருந்தவிடத்து, அத்தன்மையில் மட்டுமே செயலாற்றும்போது இறுதிவிருப்பாவண நம்பிக்கைப்பொறுப்புகளின் அல்லது வாழ்வோரிடைத் தீர்த்துவைத்தல்களின் நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் மற்றும் மரணச்சொத்துக்களின் நிருவாகிகள் அல்லது இறுதிவிருப்பாவணங்களின் நிறைவேற்றுநர்கள்.*

*7. 1971 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, வணிகக் கப்பற்றொழில் சட்டத்தின் பொருளுக்குட்பட, தனியாள் இலங்கைக் கப்பலொன்றில் தொழிலுக்கமர்த்தப்படுகின்ற காலப்பகுதியின்போது, அவ்வாறு தொழிலுக்கமர்த்தப்படுகின்ற இலங்கைப் பிரசைகள்.*

*8. மேலே 1, 2, 3 அல்லது 7 என்னும் பந்திகளிலுள்ள நிபந்தனைகளைத் திருப்திசெய்யாத இலங்கைப் பிரசையாகவுள்ள அல்லது இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட தனியாட்கள், சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கும், கட்டளைகளுக்கும், பணிப்புகளுக்கும் அமைய, தனிப்பட்ட வெளிநாட்டு நாணயக் கணக்குகளைத் திறப்பதற்கும் பேணுவதற்குமான நோக்கத்துக்காக மட்டுமே இலங்கையில் வதிபவர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*